# Fortune

## Towards a **Winning Nation**



වාර්ෂික වාර්තාව 2019 | ஆண்டறிக்கை 2019 | Annual Report 2019

**සංවර්ධන ලොතරැයි මණ්ඩලය**
**அபிவிருத்தி லொத்தர் சபை**
**Development Lotteries Board**

DEVELOPMENT LOTTERY
Enriching Your Life

வெற்றிபெறும் ஒரு தேசத்தை நோக்கிய

# அதிர்ஷ்டம்

**அபிவிருத்தி லொத்தர் சபை**
ஆண்டறிக்கை 2019



வெற்றிபெறும் ஒரு தேசத்தை நோக்கிய

# அதிர்ஷ்டம்



அற்புதமான வெற்றியின் ஒரு ஆண்டைக் குறிக்கும் வகையில், நாம் இலங்கை மக்களின் வாழ்க்கையில் ஒரு நிலைபேறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். மேலும், நாம் முன்னோக்கிச் செல்லும் போது கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கும் அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் வெற்றிகரமான ஒரு திட்டத்தை முன்வைப்போம்.

எங்கள் நவீன வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்வதற்காக புத்தாக்க தகவல் தொழில்நுட்பத்தின் மீது கட்டியெழுப்பப்படும் தளங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒரு வெற்றிகரமான தளத்தை உருவாக்கி முன்னோக்கிச் செல்கின்றோம்.”

# உள்ளடக்கம

நிறுவனத்தின் தகவல்கள் 04
எமது தொலைநோக்கும் பணியும் 05
வரலாறு பற்றியதொரு கண்ணோட்டம் 06
முக்கியமான திருப்புமுனைகள் 08
நிதிச்சிறப்பம்சங்கள் 10
தலைவரின் செய்தி மற்றும் 2019 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கை 12
பணிப்பாளர் சபையின் மீளாய்வு 15
பணிப்பாளர் சபை - 2019 16
நடப்பு பணிப்பாளர் சபை 16
31.12.2019 இல் உள்ளவாறு பதவியணி 17
முகாமைத்துவ அணி 18
கனிஷ்ட மட்ட முகாமையாளர்கள் 19
தொழிற்படுத்தல் மீளாய்வு 20
நிலைபெறுதகு தன்மை பற்றிய அறிக்கை 31
கூட்டாண்மை ஆளுகை 36
இடர் முகாமைத்துவம் பற்றிய அறிக்கை 39
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 41

# நிதிசார் அறிக்கை

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை 44
விரிவான வருமானம் பற்றிய கூற்று 65
நிதி நிலைப் பற்றிய கூற்று 66
காசுப் பாய்வுக் கூற்று 67
உரிமைப் பங்குகளிலான மாற்றம் பற்றிய கூற்று 68
கணக்கீட்டுக் கொள்கைகள் 69
இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள் 76
பத்தாண்டுக்கான பொழிப்பு 88

# நிறுவனத்தின் தகவல்கள்

**சபையின் பெயர்**
அபிவிருத்தி லொத்தர் சபை

**சட்ட வடிவம்**
இச்சபை 1097 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டம் எனும் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

**ஆரம்பிக்கப்பட்ட திகதி**
1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி

**அலுவலகத்தின் பதிவு முகவரி**
இல. 356 கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

**தொலைபேசி இலக்கம**
0112 333 546-8, 0114 824 824

**தொலைநகல் இலக்கம்**
0112 333 545

**மின்னஞ்சல் முகவரி**
info@db.lk

**இணையத்தளம்**
www.dlb.lk

**வரி அடையாள இலக்கம்**
409089844

**தற்போதைய பணிப்பாளர் சபை**
தற்போதைய பணிப்பாளர் சபை
திரு எச்.ஜீ. சுமனசிங்க - தலைவர்/ பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (பதிற் கடமை)
திரு. ரவீந்திர ஜே. விமலவீர - பணிப்பாளர்
திருமதி.ஜெனட் ஜயவர்தன - சட்டத்தரணி- பணிப்பாளர்
திருமதி ஜே.எம்.பத்ரானி ஜயவர்தன - பணிப்பாளர்

**கணக்காய்வாளர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கி**
மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி

# தொலைநோக்கு

அதிரஷ்டம் தோற்றுவிக்கும் இலங்கையின் முன்னணி அரசு நிறுவனமாக மாற்றமடைதல

# பணி

பங்கீடுபாட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் போது அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நம்பகத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதுடன் சிறப்புத் தன்மைகளை பேணிவரும் அதேவேளை நவீன மற்றும் கவர்ச்சிமிக்க லொத்தர்களை நடாத்துதல்

## குறிக்கோள்கள்

- சந்தை பங்கை அதிகரித்துக் கொள்ளுங்கள்
- சனாதிபதி நிதியத்திற்கு வழங்கும் பங்களிப்பினை அதிகரித்தல்
- புதிய தொழில்நுட்பத்தை தழுவிக் கொள்ளுதல் மற்றும் பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்துதல்
- பங்கீடுபாட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல்

## எமது அடிப்படை விழுமியங்கள்

| | |
|---|---|
| **நேர்மை** | நாங்கள் அறிமுகப்படுத்தும் லொத்தர்களும் நாம் தொழில் முயற்சியை மேற்கொள்ளுகின்ற விதமும் நியாயமானதும் நேர்மையானதும் நம்பகத்தன்மையும் கொண்டதாகும். |
| **நேர்மறையான மனோபாவம்** | லொத்தர் தொழில் முயற்சியை மேற்கொள்ளும்போது அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் தாங்கள் முகம் கொடுக்கும் அனைத்து சவால்களையும் நேர்மறையான அணுகுமுறையின் ஊடாக எதிர்கொள்கின்றனர். |
| **பெறுபேறுகளை இலக்காகக் கொண்டு செயலாற்றுதல்** | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களே நம்பிக்கையுடன் தங்களுடைய பணிகளை மேற்கொள்வதுடன் வழங்கப்பட்டுள்ள இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்துகின்றனர். |
| **புத்தாக்கம்** | தொழில் முயற்சியை மேம்படுத்தக்கூடிய முறைகள் தொடர்பாக கருத்துக்களை ஆராய்வதற்கும் மூலோபாயங்களையும் போட்டி தன்மையையும் கொண்ட சந்தை மாற்றங்களுக்கு பதில் அளிக்கும் வகையில் துரிதமாக தீர்மானங்களை மேற்கொண்டு செயல்படுவதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றது. |
| **குழுவாகச் செயற்படுதல்** | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் வெளிப்படைத்தன்மை பரஸ்பர கௌரவம் மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு கைகோர்த்துக் கொண்டு செயற்படுகின்றனர். |
| **சிறப்புத் தன்மையை இலக்குவைத்தல்** | சேவையின் தரத்தை உச்ச மட்டத்தில் பேணிவரும் பொருட்டு ஊழியர்கள் தொடர்ச்சியாக முயன்று வருகின்றனர். |

# எங்கள் வரலாறு சுருக்கமாக

## அபிவிருத்தி லொத்தர் சபையின் பரிணாமம்

அபிவிருத்தி லொத்தர் சபை 1983ஆம் ஆண்டு முதலாவதாக தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் அது அபிவிருத்தி லொத்தர் நிலையம் என அழைக்கப்பட்டது. கல்வி அபிவிருத்திக்காக நிதி வசதிகளை வழங்குதல் சனாதிபதி நிலையத்துடன் சபை வரலாற்று ரீதியாக கொண்டுள்ள நெருங்கிய உறவுகளினால் உந்தப்பட்டு மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக நிதி வசதி வழங்குதல் மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்திற்கு நிதி வசதி வழங்குதல் ஆகியவை சபையின் பிரதான குறிக்கோள்கள் ஆகும்.

பல்வேறு உள்நாட்டு நிதி மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் நிதியினை ஈடுபடுத்தும் பொருட்டு இடையறாமல் வருமானத்தை தோற்றுவிக்கின்ற திட்டம் ஒன்றை உருவாகுவதற்கு நோக்கம் கொண்ட கலாநிதி விக்கிரமபாகு வீரசூரிய அவர்கள் உடனடி லொத்தர் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியை கோரினார்.

எவ்வாறாயினும் அபிவிருத்தி லொத்தர் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்தன அவர்கள் ரூபாய் 1. 5 மில்லியன் பணத் தொகையினை ஒதுக்கிக் கொடுத்தமை மற்றும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவர்கள் அதற்கு சமமானதொரு பணத்தொகை மகாபொல உயர் கல்வி பொறுப்பு நிதியத்தில் இருந்து முதலீடு செய்தமை ஆகிய இரண்டு விடயங்களும் மேற்படி வேண்டுகோளுக்கு கிடைத்த திருப்திகரமான இரண்டு பதிலாக அமைந்தன.

நிதியத்தின் வலுவான தொலைநோக்குக்கு அமைவாக விற்பனை செய்யப்பட்ட முதலாவது லொத்தர் அபிவிருத்தி லொத்தர் என பெயரிடப்பட்டதுடன் பின்னர் சனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல புலமைப் பரிசில் நிதியம் ஆகியவற்றின் ஆரம்பக் கட்ட நிதி வசதியளிப்பின் கீழ் 1983 ஜனவரி 19ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் நிலையம் தாபிக்கப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் நிலையம் முக்கியமான பல வெற்றிகளை அடைந்து தனது தொழிற்பாட்டினை ஆரம்பித்த முதலாவது வருடத்தில் வெற்றிகரமாக வருமானத்தை ஈட்டிக் கொண்டது. இதன்மூலம் ஈட்டிக்கொண்ட இலாபத்தின் அதிகமான அளவு நிலையத்தை ஆரம்பிக்கும் விடயத்தில் பங்குதாரர்களாக இருந்த சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் பொருப்பு நிதியத்திற்கு வழங்கப்பட்டது. இற்றைவரை அபிவிருத்தி லொத்தர் சபையின் வருமானம் நாட்டில் செல்வத்தை உருவாக்கும் அடிப்படை நோக்கத்திற்காக சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

சனாதிபதி நிதியத்தினால் மேற்படி வருமானத்தில் நூற்றுக்கு ஐம்பது வீதத்தினை நாட்டின் உயர் கல்விக்கு கணிசமான ஒத்துழைப்பினை வழங்கி வரும் மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கு ஒதுக்கப்படுகின்றது. 1993ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியம் எனும் பெயரில் பொறுப்பு நிதியமாக மாற்றி அமைக்கப்பட்டது. அதனை அடுத்து 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை சட்டம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியம் அபிவிருத்தி லொத்தர் சபையாக மீண்டும் நிறுவப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் எனும் பெயரில் அழைக்கப்பட்ட முதலாவது உடனடி∴ சுரண்டும் ஒரு லொத்தர் அட்டை ரூ.10 இற்கு நாடளாவிய ரீதியில் இயங்கும் விற்பனையாளர்களின் வலைப்பின்னல் ஊடாக விற்பனை செய்யப்பட்டதுடன் 24 மணித்தியாலங்களுக்குள் இரண்டு ஜக்பாட் வெற்றியாளர்களை உருவாக்கிய மேற்படி லொத்தர் இத் தொழில்துறையில் தனது நீண்டகால பிரபல்யத்தை வலுப்படுத்துவதற்கு வழிகோலியது.

அடுத்து 1987 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் நிலையத்தினால் சனிதா வாசனா (சனிக்கிழமை அதிர்ஷ்ட லொத்தர்) எனும் பெயரில் முதல் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பை நடாத்தி வெற்றியாளர்களை தீர்மானிக்கும் ஒரு லொத்தரை அறிமுகம் செய்ததுடன் முதலில் அது சனிக்கிழமை நாட்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. உடனடியாக சுரண்டி அதிர்ஷ்டத்தை அறிந்து கொள்ளும் லொத்தர்களில் வெற்றியினைப் பெற்றுக் கொள்ளாத லொத்தர் டிக்கெட்டுகளுக்கு விசேடமாக தயாரிக்கப்பட்டு 1998 ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வாசனா சக்ரய (அதிர்ஷ்ட சீட்டிழுப்பு சுற்று) நிகழ்ச்சி ஞாயிற்றுக் கிழமை நாட்களில் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மிகவும் உயர்ந்த வரவேற்பு கிடைத்ததால் அபிவிருத்தி லொத்தர் சபை அபிவிருத்தி அதிர்ஷ்டம் எனும் பெயரில் தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பை நடாத்தும் இரண்டாவது லொத்தரை அறிமுகம் செய்ததுடன் அச் சீட்டிழுப்பு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒளிபரப்பப்பட்டது.

வெற்றி பெற்ற லொத்தர் டிக்கெட்டுகளை இனங்கண்டு கொள்ளக்கூடிய இலக்கங்களுக்கு மேலதிகமாக

அபிவிருத்தி அதிர்ஷ்ட லொத்தர் நிகழ்ச்சித்திட்டம் ராசிகளை உள்ளடக்கிய புதியதொரு அம்சத்தை அறிமுகப்படுத்தியது.

ஜாக்பாட் பரிசுகள் மற்றும் சாதாரண பணப் பரிசுகள் உள்ளடங்கிய லொத்தர்களுக்கு மேலதிகமாக அபிவிருத்தி லொத்தர் சபை 2004 ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஜயோதா சீட்டிழுப்பினை அறிமுகப்படுத்தியதுடன் இது திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது. அதில் சூப்பர் ஜாக்பாட் பரிசு ரூபாய் 10 மில்லியன் ஆரம்பத் தொகையில் ஆரம்பிக்கப்படுகிறது. இலங்கை லொத்தர் வரலாற்றில் தனித்துவமானதொரு படிமுறையை பதிவு செய்யும் வகையில் அபிவிருத்தி லொத்தர் சபை ஜயோதா நியத்த ஜெக்பொட் பரிசில் வெற்றியாளர்களுக்கு ரூபாய் 1 மில்லியன் பணத்தொகை அல்லது ஒரு மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான பெறுமதியைக் கொண்ட ஒரு வீட்டைத் தெரிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியது.

அபிவிருத்தி லொத்தர் சபை 2009 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஜன ஜய லொத்தர் சீட்டை அறிமுகம் செய்ததுடன் இது வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமை நாட்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. வெற்றியாளர்கள் சிறப்புப் பரிசுகளை வெற்றி கொள்வதற்கு 64 இலக்கங்களில் தெரிவு செய்யப்படுகின்ற 4 வெற்றி இலக்கங்களுடன் மற்றுமொரு இயந்திரத்தில் பன்னிரண்டு இலக்கங்களில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற சிறப்பு இலக்கத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். இந்த சிறப்பு பரிசில் ரூபாய் 2.5 மில்லியன் பணத் தொகையில் ஆரம்பிக்கின்றது. 2012 ஜுலை மாதம் 11 ஆம் திகதி சூப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டமை இந்நாட்டின் லொத்தர் வரலாற்றில் புரட்சிகரமானது ஒரு திருப்புமுனையை பதிவு செய்தது. ரூபாய் 30 மில்லியன் பணப் பரிசுடன் ஆரம்பிக்கின்ற இந்த விசேடமான லொத்தர் இந்நாட்டின் மிகப்பெரிய ஜாக்பாட் பணப் பரிசை வழங்குகின்ற லொத்தராக அமைவதுடன் இது நாட்டு மக்களில் பெருந்தொகையான வாடிக்கையாளர்களை ஈர்த்துக் கொள்வதற்கு ஆற்றலைப் பெற்றுக்கொண்டது.

2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையினால் பல புதிய லொத்தர் சீட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அபிவிருத்தி லொத்தர் சபை 2016 மே மாதம் 14ஆம் திகதி அபிவிருத்தி இலட்சாதிபதி லொத்தர் சீட்டினை அறிமுகப்படுத்தியதுடன் இது 5.6 மில்லியன் சீட்டுகளை விற்பனை செய்து சாதனை படைத்தது. மேலும் 2016 ஏப்ரல் மாதம் 8ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்ட கோடிபதி சனிதா (கோடீஸ்வரர் சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பு) லொத்தர் சீட்டு விற்பனை ஆரம்ப விற்பனை முதல் சுற்றின் போதே 4.4. மில்லியன் லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதற்கான ஆற்றலைப் பெற்றது.

புதிய எதிர்பார்ப்பினை தோற்றுவித்து புதிய ஈர்ப்புடன் கூடியதாக மூன்று பணப் பரிசில்களை கொண்டதாக அறிமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி லொத்தர் தொலைக்காட்சி லொத்தர் சீட்டிழுப்பு 2016 டிசம்பர் 12ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது இதற்கு மேலதிகமாக 2017 ஆகஸ்ட் 31ஆம் திகதி அத கோடிபதி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்திற்கு நிதியினை சேகரிப்பதற்காகவே தாபிக்கப்பட்டது. ஆகவே அபிவிருத்தி லொத்தர் சபையின் அனைத்து இலாபமும் சனாதிபதி நிதியத்தின் வைப்பில் இடப்படுகிறது. இதற்கமைவாக சபையின் வரலாற்று முழுவதிலும் சபை மக்களுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்று கடந்த 37 வருட காலமாக ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பாக அந்நிதியத்திற்கு இருபத்தேழு( 27 ) பில்லியனுக்கு மேற்பட்ட தொகையினை வழங்கியுள்ளது.

# முக்கியமான திருப்புமுனைகள்

## 1983

இலங்கையில் முதல் முறையாக உடனடி சீட்டிழுப்பு லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 1987

இந்நாட்டில் முதல் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சீட்டிலுப்பு நடாத்தப்பட்ட சனிதா வாசனா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 1993

அதுகுறித்து லொத்தர் நிலையம் அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியமாக உருமாற்றம் செய்யப்பட்டது.

## 1997

அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியம் 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை எனும் பெயரில் மீண்டும் தாபிக்கப்பட்டது.

- ரூபாய் 2 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டத்தினை அடைந்து கொண்டது.

## 1998

வெற்றி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளாத உடனடிஃ சுரண்டும் லொத்தர் சீட்டுகளுக்கு வாசனா சக்ரய ( அதிர்‘ட வட்டம்) தொலைக்காட்சி சீட்டிழுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது

- முதல் பரிசாக சொகுசுமோட்டார் வாகனத்தை பரிசாக வழங்கும் 100 ரூபாய் பெறுமதியுடைய லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்கின்ற விண்டோஸ் மற்றும் யுரேகா உடனடி லொத்தர் சீட்டுடன் அபிவிருத்தி அதிர்‘ட லொத்தர் சீட்டு அறிமுகப்படு த்தப்பட்டது.

## 1999

2000 ஆம் ஆண்டு எதிர்நோக்க வேண்டியிருந்த தொழில்நுட்ப சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் கணினி முறைமை இற்றைப் படுத்தப்பட்டது.

## 2004

அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோடி அம்சமாகிய பணப்பரிசு அல்லது ஒரு வீடு எனும் மாற்றுவழி முறையுடன் கூடிய ஜயோதா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

- ரூபாய் மூன்று பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டம் அடைந்து கொள்ளப்பட்டது.

## 2008

இலக்கம் 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.

- ரூபாய் 5 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வினை பதிவு செய்தது.

## 2010

சிறப்பு ஜாக்பாட் பரிசுடன் ஜனஜய லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

## 2011

நியத்த ஜய (வெற்றி நிச்சயம்) லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

## 2012

ரூபாய் 30 மில்லியன் பெருமதியுடைய சிறப்பு ஜாக்பாட் பரிசுடன் சூப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

## 2013

ஆகக்கூடிய பெறுமதியுடைய ஜாக்பாட் பரிசுத்தொகையை வழங்குகின்ற ஹைவே ட்ரீம் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

## 2014

குறுஞ்செய்தி சேவை ஊடாக லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது

## 2016

சங்வர்தன லக்'பதி ( அபிவிருத்தி இலட்சாதிபதி) கோட்டிபதி சனிதா (சனிக்கிழமை கோடிஸ்வரர்) மற்றும் சங்வர்தன வாசனா ( அபிவிருத்தி அதிர்'டம்) ஆகிய லொத்தர்களை ஆரம்பித்தல்.

## 2017

அத கோட்டிபதி ( இன்றைய கோடீஸ்வரர்) லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது

## 2018

ஜஏசு மற்றும் குறுஞ்செய்தி சேவை ஊடாக பெறுபேறுகளை அறியத் தரும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2019

DLB Sweep App பயன்பாட்டினை அறிமுகப்படுத்துதல்

# நிதிச்சிறப்பம்சங்கள்

### வருமானம் (ரூ)




### வரிக்கு முந்திய இலாபம்




### சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ)




### வருமான வரி




### அரசுக்கான மொத்த பணவனுப்பல்கள்




### மொத்த சொத்துக்கள்



| செயற்பாட்டு விளைவுகள் | 2019 | 2018 |
|---|---|---|
| வருவாய் | 17,065,414,012 | 15,854,856,246 |
| மொத்த இலாபம் | 7,117,747,971 | 6,580,641,989 |
| வரிக்கு முந்திய இலாபம் | 2,897,130,924 | 2,735,247,442 |
| வரி செலவுகள் | 235,073,385 | 553,166,576 |
| தேறிய இலாபம் | 2,668,792,667 | 2,187,603,956 |
| சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு | 2,191,000,000 | 1,968,000,000 |

## நிதி நிலைப் பற்றிய கூற்று

| சொத்துக்கள் | | |
|---|---|---|
| ஆதனங்கள் இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணஙகள் | 1,245,588,144 | 719,081,433 |
| ஊழியர் நலன் சார்ந்த சொத்துக்கள் | 7,038,067 | 2,271,294 |
| நிரந்தர வைப்புகள | 1,451,307,572 | 1,218,142,035 |
| இருப்புகள் | 51,026,204 | 80,340,650 |
| வர்த்தக கடனாளிகள் மற்றும் ஏனைய வருமதிகள் | 126,012,880 | 169,375,594 |
| முற்கொடுப்பனவுகள் மற்றும் வைப்புகள் | 5,212,271 | 11,633,780 |
| கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு | 795,666,048 | 461,682,393 |
| **மொத்த சொத்துக்கள்** | **3,681,851,186** | **2,662,527,179** |

| பொறுப்புகள் | | |
|---|---|---|
| ஊழியர் நலன்சார்ந்த பொறுப்புகள | - | - |
| முகவர் மற்றும் விநியோகத்தரகளுக்கு செலுத்தவேண்டியவை | 36,110,381 | 35,395,381 |
| கடன் செலவுறுதிச்சீட்டு செலுத்தவேண்டியவை | 160,547,860 | 94,273,760 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை | 563,493,496 | 671,110,675 |
| சுனாதிபதி நிதியத்திற்கு செலுத்தவேண்டியவை | 477,792,667 | 237,466,297 |
| செலுத்தவேண்டிய பரிசு | 760,794,203 | 648,835,116 |

| உரிமைப் பங்கு | | |
|---|---|---|
| சுனாதிபதி நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| பரிசுகளுக்கான ஒதுக்கக் கணக்கு | 1,103,197,285 | 971,045,950 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 575,515,293 | |
| **மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்** | **3,681,851,186** | **2,662,527,179** |

| இலாபத்தன்மை விகிதம் | | |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் | 17% | 17% |
| மொத்த இலாப விகிதம் | 42% | 42% |

| திரவ நிலை விகிதம் | | |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1 : 1.64 | 1 : 1.37 |
| ஊடனடி (திரவ) சொத்து விகிதம் | 1: 1.60 | 1 : 1.31 |

# தலைவரின் செய்தி மற்றும் 2019 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கை

அபிவிருத்தி லொத்தர் சபை அனைத்து சந்தர்ப்பங்களிலும் மாற்றமடைந்து நுகர்வோரின் விருப்பத்திற்கு இசைந்தொழுகி பணியாற்றியுள்ளதுடன் கடந்த 12 மாத காலத்திற்குள் எமது சமூகத்திற்கு முக்கியமான பங்களிப்பினை வழங்கியுள்ளதென நாம் திடமாக நம்புகின்றோம்.

2019 டிசம்பர் 31ஆம் தேதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் நிதி கூற்றுகளை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். அபிவிருத்தி லொத்தர் சபை மீது நம்பிக்கை வைத்து எமது லொத்தர் உற்பத்திகளை கொள்வனவு செய்கின்ற இலங்கை மக்களுக்கு அரசாங்கத்தினால் ஒழுங்குறுத்தப்படும் லொத்தர் உற்பத்திகளை விற்பனை செய்கின்றோம் என்பதை பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகிய நாங்கள் பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஆற்றல் கிட்டியது. சமூகப் பொறுப்புகளை சமநிலை படுத்துகின்ற அதேவேளை எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக நன்மைகளை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அபிவிருத்தி லொத்தர் சபையின் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படுவதுடன் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற நிறைவேற்று மட்டத்திலான தீர்மானங்களின் ஊடாக அதற்கான நியாயப்படுத்தல்கள் மேலும் உறுதி செய்யப்படுகின்றது.

சனாதிபதி நிதியத்திற்கு ரூபாய் 2191 மில்லியன் பங்களிப்பினை வழங்கி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் எட்டு விதமான வளர்ச்சியினை வெளிப்படுத்தி 2019 ஆம் ஆண்டில் சபை ரூபாய் 17 தசம் ஒன்று பில்லியன் புரள்வினை அடைந்து ஸ்திரமற்றதொரு நிலையைத் தோற்றுவித்துள்ளது. covid-19 தொற்று காரணமாக நாடு மூடப்பட்ட நிலையில் இருந்ததால் 2020 மார்ச் 18ஆம் திகதி முதல் மே மாதம் 18ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சபையின் தொழிற்பாடுகள் எதுவும் இடம் பெறவில்லை. இதன் காரணமாக 2020 நிதியாண்டில் சபைக்கு அண்ணளவாக ரூபாய் ஆயிரத்து 3256 மில்லியன் பெருமதியான லொத்தர் சீட்டு விற்பனையை இழக்க நேரிட்டது. இதன் காரணமாக பின்வரும் அட்டவணையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு சபை 2020 ஜுலை 31 ஆம் தேதியில் நிறைவுபெற்ற காலப்பகுதிக்கு சனாதிபதி நிதியத்திற்கு வழங்குவதற்கு இலக்கு வைக்கப்பட்டிருந்த பங்களிப்பு ரூபாய் 568 மில்லியன் குறைவாகவே பங்களிப்பு வழங்கியுள்ளது.

| | 2019 | 2018 | வித்தியாசம் | மாற்றம் % |
|---|---|---|---|---|
| வருமானம் (ரூ.மில்) | 17,065 | 15,854 | 1,211 | 8% |
| வரிக்கு பிந்திய இலாபம் (ரூ.மில்) | 2,668 | 2,187 | 481 | 22% |
| சுனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ.மில்) | 2191 | 1968 | 223 | 11% |

உறுதிப்படுத்துகின்றோம். நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு லொத்தர் சீட்டின் ஊடாகவும் நீங்களும் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக வழங்குகின்ற பங்களிப்பினை பற்றி மக்கள் விழிப்புணர்வு அடைந்து இருக்கின்றார்கள் என நம்புகின்றோம். அபிவிருத்தி லொத்தர் சபைக்கு பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் வாடிக்கையாளர்களின் வேண்டுகோள்கள் ஆகிய இரண்டையும் சமநிலையில் பேணி கடந்த நிதியாண்டில் இவ்விடயத்துக்குரிய கொள்வதற்கு ஆற்றல் கொண்டிருந்ததென பதிவு செய்வதற்கு வாய்ப்பு கிட்டியமை சபைக்கு மகிழ்ச்சியை ஈட்டித் தருகின்ற விடயமாகும். அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர்களின் வருடாந்த வளர்ச்சி வீதம் 8 வீதமாகும்.

## நடப்பு ஆண்டுக்கான நிதி மீளாய்வு -2020

covid-19 தொற்று அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாடுகளுக்கு எதிர்வுகூற முடியாத அளவில்

## எமது வெற்றிகள்

2019 ஆம் ஆண்டில் நாம் சனாதிபதி நிதியத்திற்கு ரூபாய் 2191 மில்லியன் வழங்கியதுடன் அதன்மூலம் சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கும் எமது தற்போதைய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கும் வாய்ப்பு கிட்டியது. இதற்கு மேலதிகமாக நாம் அக்காலகட்டத்தில் எமது பாதிடுக்கு அமைவான வருடாந்த விற்பனை இலக்கில் நூற்றுக்கு நூறு வீதத்தை

| | 2020 யூலை வரை | 2020 யூலை வரை | வேறுபாடு | மாற்றம் % |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு | உண்மை | | |
| மொத்த விற்பனை (ரூ.மில்) | 10,786 | 7,529 | (3,256) | -30% |
| மொத்த வரி (ரூ.மில்) | 1,219 | 269 | (950) | -78% |
| வரிக்கு முந்திய இலாபம் (ரூ.மில்) | 1,952 | 1,358 | (594) | -30% |
| சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ.மில்) | 1,830 | 1,262 | (568) | -31% |

அடைந்தோம். இவ்வருடத்தில் அபிவிருத்தி லொத்தர் சபையின் புரள்வு ரூபாய் 17.1 பில்லியனாக இருந்ததுடன் இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு எட்டு விதமான வளர்ச்சியாகும்.

## புதிய திருப்புமுனைகள்

எம்மைச் சுற்றியுள்ள பரந்த சமூகம் மீது எமக்கு ஒரு பொறுப்பு உள்ளது. அதன் காரணமாகவே பல வருடங்களாக எமது பயணத்தை வெற்றிகரமாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கு பங்களிப்பு வழங்கிய சமூகத்திற்கு எமது இலாபத்தை மீளப் பெற்றுத் தருவதற்கு நமக்கு ஆற்றல் கிட்டியுள்ளது. செலுத்தப்பட்டு உள்ள பரிசு பணத்தொகை ரூபாய் 8.9 பில்லியன்கள் ஆகும். ஈட்டப்பட்ட இலாபம் பிரதானமாக சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்டதுடன் அப் பணத்தொகை பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும் பொருளாதார அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கும் ஈடுபடுத்தப்படுகின்றது.

## எமது குழு

லொத்தர் சபையின் செயலூக்கமிக்க பலம் வாய்ந்த குழு எமது வெற்றியின் பிரதான காரணியாகும். எமது சந்தைப்படுத்தல் நிதி தகவல் தொழில்நுட்பம் பெறுகைகள், விற்பனை, நிர்வாகம் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய பிரிவுகளின் குழுக்கள் இவ்விடயத்தில் முன்னணியில் இருக்கின்றன. பெறுகைகள் மற்றும் மனித வள பிரிவுகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சிறப்புமிக்க தலைவர்கள் தற்போதுள்ள குழுவுக்கு மேலும் பலத்தை சேர்த்துள்ளனர். அவர்களின் புத்தாக்க கருத்துக்கள் எமது உற்பத்திகளை முன்னெடுத்துச் சென்று லொத்தர் அனுபவங்களில் புதிய பரிமாணங்களை அறிமுகப்படுத்தி சபையினை உயர் மட்டத்திற்கு உயர்த்தி வைத்துள்ளனர்.

## புதிய தொழில்நுட்பம்

24 மணித்தியாலங்களும் தொழிற்படுகின்ற Interactive Voice Response பதிலளிக்கு முறைமை ஊடாக பயன்பாடொன்று அறிமுகப்படுத்துவதன் மூலம் நாங்கள் மற்றுமொரு வெற்றியினை அடைந்து கொண்டுள்ளோம். DLB Sweep App பயன்பாட்டின் மூலம் பயன்படுத்துனர்களுக்கு செல்லிடத் தொலைபேசியினைப் பயன்படுத்தி தங்களின் வெற்றியை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. செல்லிடத் தொலைபேசி வாயிலாக லொத்தர் சீட்டுகளில் உள்ள QR குறியீட்டினை பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் தங்களுடைய வெற்றியையும் சம்பந்தப்பட்ட பணப்பரிசு பற்றிய விடயங்களையும் உறுதிப் படுத்திக் கொள்வதற்கும் இதன் மூலம் வாய்ப்புக் கிட்டுகின்றது.

## நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகள்

எமது விற்பனையாளர்களுக்கு 274 லொத்தர் சீட்டு விற்பனை கூடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் அதன்மூலம் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமக்கு ஆற்றல் கிட்டியது. இதற்கு மேலதிகமாக நாம் 255 லொத்தர் விற்பனை கரும பீடங்களில் ஸ்டிக்கர்களை ஒட்டியதுடன் அவற்றுக்கு அனுசரணை வழங்கி அம்பாறை பதுளை நுவரெலியா காலி அம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் லொத்தர் விற்பனை பிரதிநிதிகளுக்கு மருத்துவ முகாம்களை நடாத்தி மாற்றுத்திறனாளிகளாக இருக்கும் விற்பனை உதவியாளர்களுக்கு 63 முச்சக்கர மிதிவண்டிகளை வினியோகித்து உள்ளோம்.

சனாதிபதி நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கு மேலதிகமாக அபிவிருத்தி லொத்தர் சபை லொத்தர் விற்பனை பிரதிநிதிகளின் பிள்ளைகளுக்கு உதவுவதற்காக புலமைப்பரிசில் முறை ஒன்றையும் அறிமுகப்படுத்தியது. இவ்வருடத்தில் அவர்களில் சுமார் 25 பேர் அதன் மூலம் நன்மை அடைந்துள்ளனர். மேலும் இக்காலகட்டத்தில் நாம் பல்வேறு பிரதேசங்களில் சேர்ந்த பௌத்த ஆலயங்களுக்கும் மத மற்றும் கலாச்சார நிகழ்வுகளுக்கும் பங்களிப்பு வழங்கி மேலும் பல சமுதாய சேவை கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தினோம்.

## எதிர்கால தொலைநோக்கு - 2020

கோவிட் 19 தொற்று காரணமாக கைத்தொழில் துறை புதிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. எவ்வாறாயினும் அயராது உழைத்து நிதானமாக செயற்படுவதன் மூலம் சவால்களுக்கு மத்தியில் நாங்கள் இடையறாமல் வளர்ச்சி அடைவோம். வளர்ச்சி மற்றும் சமூகப் பொறுப்பு மீது நாம் கொண்டுள்ள தளராத அர்ப்பணிப்பு எவ்விடத்திலும் குறையப்போவதில்லை.

1. கோவிட் - 19 தொற்றின் தாக்கத்தை சமாளித்துக் கொள்வதற்கு சபை தனது 4 முன்னணி வர்த்தக குறியீட்டினை தினசரி அடிப்படையில் அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்கமைவாக சனிதா வாசனா லக்ன வாசனா அத கோடிபதி மற்றும் சூப்பர் போல் ஆகிய லொத்தர்கள் தினசரி சீட்டிழுப்புக்கு உட்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இந்த சீட்டிழுப்புக்களின் போது ஒரு விளம்பரமாக கவர்ச்சிமிகு இரண்டாவது சீட்டிழுப்பு ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு பின்னர் எமது விற்பனையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்ககூடியதாக உள்ளது.

2. மேலும், E - APP பயன்பாட்டை அடிப்படையாகக்கொண்டு சந்தைக்கு லொத்தர்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

3. டிஜிட்டல் லொத்தர் வரிசைக்கு உட்பட்ட சசிறி எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய லொத்தர் சீட்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாக எமது விற்பனையை உயர்த்துவதற்கு புதிய சந்தைகளை எமது வசம் வைத்துக் கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்விடயத்தில் சந்தையின் இலக்கு குழு இணையவழி சந்தையில் அதிக செலவுகளை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களாகும்.

4. விற்பனையை அதிகரித்து கொள்ளும் நோக்கில் ஒரு நாளில் 4 சீட்டிழுப்புகள் மாத்திரம் நடாத்தப்பட்டதாயினும் 2020 செப்டம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவ்வெண்ணிக்கை ஐந்தாக உயர்த்தப்பட்டுள்ளது.

5. மேலும் செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்களுக்கு குறுஞ்செய்தி சேவையினை அடிப்படையாகக்கொண்ட ஒரு லொத்தரை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேதகு ஜனாதிபதி அவர்கள் கௌரவ நிதி அமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளர் வழங்கும் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டுதலுக்கு எனது மனமார்ந்த நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். கடந்த காலம் முழுவதிலும் மற்றும் தற்போதும் ஒன்றாக இணைந்து எமது சமுதாயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கிய அத்துடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுகின்ற மிகவும் திறமையும் அர்ப்பணிப்பும் கொண்ட எமது பணியாட்தொகுதியின் ஒத்துழைப்புடன் அறிவினைப் பெற்றுக்கொண்டு அவற்றைப் பகிர்ந்து கொண்டு எமது பல்வேறு தரப்புகளுடன் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தமை மிகவும் பெறுமதியான அனுபவமாகும்.

எல்லா சீட்டிழுப்பின் போதும் பணியாற்றியுள்ள நடுவர்கள் சனாதிபதி நிதியத்தின் பணியாட்டொகுதியினர் மகாபொல உயர்கல்வி பொறுப்பு நிதியத்தின் பணியாளர்கள் எமது வினியோகஸ்தர்கள் விற்பனையாளர்கள் விற்பனை உதவியாளர்கள் மீள் விற்பனையாளர்கள் ஊடகவியலாளர்கள் வங்கியாளர்கள் ஏனைய சேவை வழங்குனர்கள் மற்றும் எமது நிறைவேற்று பணியாட்டொகுதியின் அனைத்து உத்தியோகத்தர்கள் குறிப்பாக பொது முகாமையாளர் பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் உதவி பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கு எனது விசேட நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அபிவிருத்தி லொத்தர் சபை நாம் வழங்கும் சேவையினை அர்த்தமிக்கதாக பரிணமிக்க செய்வதற்கு அவர்கள் உண்மையிலேயே எனக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். மேலும் எமது சேவைகளுக்கு அனுசரணை வழங்குகின்ற எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் அனுசரணை இல்லாவிடின் எமக்கு இந்த வெற்றிகளை அடைந்து கொள்வதற்கு வாய்ப்பு கிட்டியிருக்காது. மேலும் எமக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த பங்களிப்பினை வழங்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கும் எமது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக நிறுவனம் மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்காக எமது அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் நன்றியினை தெரிவிப்பதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் உங்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பினை நான் எதிர்பார்க்கின்றேன்.



**எச்.ஜீ. சுமனசிங்க**
தலைவர்.'. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (பதில் கடமை)

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு

1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தினால் அபிவிருத்தி லொத்தர் சபை நிர்வகிக்கப்படுகின்றது. சனாதிபதி நிதியத்திற்கும் மகாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் பொறுப்பு நிதியத்திற்கும் நிதி வசதி அளித்தல் இச்சபையின் முதன்மை குறிக்கோளாகும். முந்தைய வருடத்தில் போலவே இவ்வருடத்திலும் பெருமளவு பணப்பரிசுகளை செலுத்தி சில சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்களுக்கு செலுத்தும் பரிசுத் தொகையை அதிகரித்து சனாதிபதி நிதியத்திற்கு ம் ரூபாய் 2191 மில்லியன் தொகையை வழங்கிய பின்னரும் எமது விற்பனையின் மூலம் குறிப்பிடத்தக்களவு இலாபத்தை பெற்றுக் கொள்வதற்கு எமக்கு ஆற்றல் கிட்டியது.

மீளாய்வு ஆண்டில் புதிய மாற்று லொத்தர் வெற்றி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சந்தையின் பங்கினை கைப்பற்றிக் கொள்வதற்கு பின்பற்றப்பட்ட மேலும் பல நவீன மூலோபாயங்கள் இருந்தன.

### தெளிவாக காணக்கூடிய எமது வெற்றிகள்

எமது வாடிக்கையாளர்களுக்கு அதிகமாக பணப் பரிசில்களை வழங்கும் அதேவேளை DLB Sweep App பயன்பாடு வாயிலாக எமது வாடிக்கையாளர்களின் அனுபவத்தை விருத்தி அடையச் செய்வதற்கு எமக்குஆற்றல் கிட்டியது. இதனை பயன்படுத்துபவர்களுக்கு இந்தப் பயன்பாடு கிழமையின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியாலமும் இதனைப் பயன்படுத்த முடியும் என்பதுடன் இதன் மூலம் அவர்களுக்கு வெற்றி பெற்ற லொத்தர் சீட்டினை அறிந்து கொள்வதற்கும் பணப்பரிசு களுக்கான உரித்தினை கோருவதற்கும் வாய்ப்பு கிட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியில் 274 புதிய விற்பனைக் கூடங்களை தாபித்து மக்களுக்கு தொழில் வாய்ப்பினை உருவாக்கித் தருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் அனுபவங்களை மேலும் விரிவாக்குவதற்கு திட்டமிட்டு நாம் 255 லொத்தர் கரும பீடங்கள் எமது வர்த்தக குறியீட்டினை ஒட்டி குறியீட்டு லொத்தர் விற்பனை பிரதிநிதிகளுக்கு 7 மாவட்டங்களை உள்வாங்கும் வகையில் மருத்துவ முகாம்களை நடத்தி மாற்றுத்திறன்களைக் கொண்ட விற்பனை உதவியாளர்களுக்கு 63 முச்சக்கர மிதிவண்டிகளை வழங்கினோம்.

அபிவிருத்தி லொத்தர் சபையைச் சேர்ந்த நாங்கள் எமது தொழில் முயற்சியினை சமூக ரீதியில் பொறுப்புமிக்க வகைகள் முன்னெடுத்து வருகின்றோம். சமூகரீதியில் பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் நிலைபேறான தொழில் முயற்சி நிறுவனமொன்றின் நிலையானது எமக்கு ஈட்டித் தந்துள்ள அறிவு பயிற்சி மற்றும் மீளாய்வு செயல் முறைகளைப் பின்பற்றுவதற்கு நாம் உற்சாகம் கொண்டவர்களாக இருக்கின்றோம். சந்தையிலுள்ள எமது உற்பத்திகளில் ஊக்குவிப்பு சாதனங்களில் மற்றும் வர்த்தக விளம்பரங்களில் எமது பரிசுகளை வெல்வதற்கான செய்தி உள்ளடங்கியுள்ளது என்பதை நாம் உறுதிப்படுத்துவதுடன் அது சமூக ரீதியில் பொறுப்பு மிக்க வகையில் சமூகத்துக்கு மீண்டும் பங்களிப்பினை வழங்குகின்றது. நாம் நவீன, மகிழ்ச்சி ஊட்டுகின்ற லொத்தர் உற்பத்திகளை வழங்கி தொடர்ச்சியாக எமது வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது கவனம் செலுத்தி வருகின்றோம்.

இவ்வருடத்தில் எமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கும் வினைத்திறன் மிக்க வகையில் பணியாற்றிய எமது பணியாட் தொகுதிக்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அவர்கள் உயர் தரத்திலான உற்பத்திகளை சந்தைக்கு வழங்கியது மாத்திரமன்றி தாபனத்தின் சமூக பொறுப்பு சட்டகத்துக்குள் வாடிக்கையாளர்களின் அனுபவம் மேம்படுத்த படுவதையும் உறுதி செய்துள்ளனர்.



**ரவீந்ர ஜே விமலவீர**
பணிப்பாளர்

| | 2019 | 2018 |
|---|---|---|
| வருவாய் (ரூ.மில்) | 17,065 | 15,854 |
| சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ.மில்) | 2,191 | 1,968 |
| வெற்றியாளர்களுக்கான பரிசுப் பணம் | 8,903 | 8,296 |

# பணிப்பாளர் சபை - 2019

**திரு, S.A.P. சூரியப்பெரும**
தலைவர்/பிரதம நிறைவேற்று
உத்தியோகத்தர்
14.09.2017 தொடக்கம் 21.11.2019 வரை

**திரு. H.R. விமலசிரி**
தொழிற்பாட்டு பணிப்பாளர்
14.09.2017 தொடக்கம் 22.11.2019 வரை

**திரு. H.C.D.L. சில்வா**
மேலதிக பணிப்பாளர் நாயகம்
திறைசேரி தொழிற்படுத்தல் திணைக்களம்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 01

பணிப்பபாளர்
26.09.2017 தொடக்கம் 10.01.2020 வரை

**திரு. D.N. நாணாயக்கார**
சனாதிபதியின் மேலதிக செயலாளர்
மற்றும் சனாதிபதி நிதியத்தின்
செயலாளர்
சனாதிபதி செயலகம்
கொழும்பு 01

பணிப்பாளர்
10.10.2017 தொடக்கம் 02.12.2019 வரை

**திரு. M.P. பண்டார**
பணிப்பாளர்
மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில்
நம்பிக்கை நிதியம்

பணிப்பாளர
28.01.2019 தொடக்கம் 02.12.2019 வரை

# தற்போதைய பணிப்பாளர் சபை

**திரு. H.G. சுமனசிங்க**
தலைவர்/பிரதம நிறைவேற்று
உத்தியோகத்தர். அபிவிருத்தி லொத்தர்
சபை
மேலதிக செயலாளர், நிதி அமைச்சு

**திருமதி. J.M. பத்ரானி ஜயவர்தன**
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
செயலாளர், வர்த்த அமைச்சு

**திரு. ரவீந்ர J. விமலவீர**
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
பிரதம நிதி உத்தியோகத்தர், சனாதிபதி
செயலகம

**திருமதி. ஜெனட் ஜயவர்தன**
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
சட்டத்தரணி

# 31.12.2019 இல் உள்ளவாறு பதவியணி

| பதவி | சம்பள குறியிடு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடஙகள் | மிகை |
|---|---|---|---|---|---|
| தலைவர்.'.பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (பதில் கடமை) | | 1 | 1 | | |
| தொழிற்பாட்டு பணிப்பாளர் | | 1 | | 1 | |
| பொது முகாமையாளர் | H.M - 2.1 | 1 | 1 | | |
| பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | H.M - 1.1 | 1 | 1 | | |
| பிரதி பொது முகாமையார் (நிதி) | H.M - 1.1 | 1 | 1 | | |
| உதவி பொது முகாமையார் (சந்தைப்படுத்தல்) | M.M-1.1 | 2 | 2 | | |
| உதவி பொது முகாமையாளர் (நிதி) | M.M- 1.1 | 3 | 2 | 1 | |
| உதவி பொது முகாமையாளர் (விற்பனை) | M.M- 1.1 | 2 | 1 | 1 | |
| உதவி பொது முகாமையாளர் (மனித வளம்/நிர்வாகம்) | M.M- 1.1 | 1 | 1 | | |
| உதவி பொது முகாமையாளர் (பெறுகைகள்) | M.M- 1.1 | 1 | 1 | | |
| உதவி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) | M.M- 1.1 | 1 | 1 | | |
| உள்ளகப் பணிப்பாளர் | M.M- 1.1 | 1 | 1 | | |
| நிர்வாக உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| போக்குவரத்து உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| பிராந்திய முகாமையார் | J.M- 1.1 | 10 | 10 | | |
| நிதி உத்தியோகத்தர் | J.M- 1.1 | 4 | 4 | | |
| முறைமை மற்றும் நிகழ்ச்சித்திட்ட பகுப்பாய்வாரள் | J.M- 1.1 | 1 | 1 | | |
| பெறுகைகள் உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| மனித வள உத்தியோகததர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் உத்தியோகத்தர் | J.M- 1.1 | 1 | 1 | | |
| விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | MA - 3 | 24 | 16 | 8 | |
| தரக் கட்டுப்பாட்டு உதவியாளர் | MA - 3 | 1 | | 1 | |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA - 3 | 4 | 2 | 2 | |
| ஊடக மற்றும் பொதுமக்கள் தொடர்பு உதவியாளர் | MA-3 | 1 | 1 | | |
| நிதி உதவியாளர் | M.A-2.2 | 2 | 0 | 2 | |
| பிரதம முகாமைத்துவ உதவியாளர் | MA-1.2 | 1 | 1 | | |
| அலுவலக பணியாளர்களுக்கான உதவியாளர் | MA-1.2 | 1 | 1 | | |
| முகாமைத்துவ உதவியாளர் | MA-1.2 | 137 | 129 | 8 | |
| விற்பனை ஒருங்கிணைப்பாளர | MA-1.1 | 5 | 3 | 2 | |
| சாரதி | P.L - 3 | 43 | 43 | | |
| மின்சரவியலாளர் | P.L -3 | 2 | 2 | | |
| அலுவலக உதவியாளர் | P.L -1 | 65 | 60 | 5 | |
| கள ஊக்குவிப்பாளர் | P.L -1 | 10 | 9 | 1 | |
| களம்சார்ந்த நடமாடும் வண்டி அறிவிப்பாளர் | P.L -1 | 6 | 1 | 5 | |
| பாதுகாப்பு உதவியாளர் | P.L -1 | 3 | 15 | | 12 |
| **மொத்தம்** | | **342** | **317** | **37** | **12** |

# முகாமைத்துவ அணி

01 **திரு. H.G. சுமனசிங்க**
துலைவர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

02 **திரு. W.K.A.A ஜயரத்ன**
பொது முகாமையாளர்

03 **செல்வி. W.A.V.C சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

04 **திரு. D.D.C. தமிந்த**
பிரதி பொது முகாமையாளர் (சந்)

05 **திரு. கபில புலத்சிங்கள**
உதவி பொது முகாமையாளர் (சந்)

06 **திருமதி. அசங்க S. குணசிங்க**
உதவி பொது முகாமையாளர் (சந்)

07 **திரு. T. கசுன் ஜயசூரிய**
உதவி பொது முகாமையாளர் (நிதி)

08 **திரு. நிஷான் பெரேரா**
உதவி பொது முகாமையாளர் (நிதி)

09 **திரு. K.P. சுனில் ஜயரத்ன**
உதவி பொது முகாமையாளர் (விற்பனை)

10 **திரு. K.R.R. பிரசாத் ரணசிங்க**
உதவி பொது முகாமையாளர் (மனித வளம்/நிர்வாகம்)

11 **திரு. P.B. மதுர ஹர்ஷன**
ஊதவி பொது முகாமையாளர் ( உதவி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

12 **திரு. S.M.A. வசந்த உதய குமார**
உள்ளக கணக்காய்வாரள்

13 **திரு. P.D.U. மலிந்த**
உதவி பொது முகாமையாளர் (பெறுகை)

# கனிஷ்ட முகாமையாளர்கள்

01 **திரு. E.D.I.N.S. அபேரத்ன**
நிர்வாக உத்தியோகத்தர்

02 **திரு. J.M.D.A. கிறிஷாந்த**
பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்

03 **திரு G ரொஷான் பிரியந்த**
பிரதேச முகாமையாளர்

04 **திரு.C.C. ஜலபெறுமை**
பிரதேச முகாமையாளர்

05 **திரு.M.B.M.N.K. பலகல்ல**
பிரதேச முகாமையாளர்

06 **திரு.G.A.R.S. ரணதுங்க**
பிரதேச முகாமையாளர்

07 **திரு. M.K.A.I. கமலசிறி**
பிரதேச முகாமையாளர்

08 **திரு. I.D. பத்ம குமாரசிறி**
பிரதேச முகாமையாளர்

09 **திரு. D.M.B.L. மஹிந்த**
பிரதேச முகாமையாளர்

10 **திருமதி. M.L. கௌரவி கௌசல்யா**
பிரதேச முகாமையாளர்

11 **திரு. R.A. சுனில் ரத்நாயக்க**
பிரதேச முகாமையாளர்

12 **திரு. R.M.U.S. குமார**
பிரதேச முகாமையாளர்

13 **திரு. N.V. இந்திக உபுல்**
நிதி உத்தியோத்தர

14 **திருமதி. R.D.C. ராஜபக்ஷ**
நிதி உத்தியோத்தர்

15 **திருமதி. M.A.L.N. குணசேகர**
நிதி உத்தியோகத்தர்

16 **திருமமதி. R.A.W.G. ரூபசிங்க**
நிதி உத்தியோத்தர்

17 **திரு U.G. ஜலபெரும**
முறைமை பகுப்பாய்வாளர்.·.நிகழ்ச்சித்திட்ட பகுப்பாய்வாளர்

18 **திரு. B.A.C.J. கருணாரத்ன**
பெறுகை உத்தியோகத்தர்

19 **திருமதி. C.N. தெவரப்பெரும**
மனித வள உத்தியோத்தர்

20 **திரு. P. பிரசன்னா கோகுல பர்னாந்து**
போக்குவரத்து உத்தியோகத்தர்

21 **திருமதி. G.D.S. பிரேமதிலக**
சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் உத்தியோகத்தர்

# தொழிற்பாட்டு மீளாய்வு

## 2019 ஆம் ஆண்டின் சந்தைப்படுத்தல் தொடர்பான சிறப்பு விடயங்கள

அபிவிருத்தி லொத்தர் சபையின் சந்தைப்படுத்தல் பணிகள் பொருத்தமான திட்டங்களுடன் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட வருடமாக 2019 ஆம் ஆண்டினை குறிப்பாகச் சுட்டிக் காட்ட முடியும். மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் உயர்ந்த வினைத்திறனை உறுதிப்படுத்தும் வகையில் இத் துறையில் பணியாற்றியதன் விளைவாக அபிவிருத்தி லொத்தர் சபைக்கு தனது லொத்தர் வெற்றியாளர்களுக்கு பணப் பரிசாக பெருந்தொகையான பணத்தை பரிசாக வழங்குவதற்கும் சனாதிபதி நிதியத்திற்கு பெருமளவு பங்களிப்பு பணத்தை வழங்குவதற்கும் ஆற்றல் கிட்டியது.

2019 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளை ஈடுபடுத்தியன் மூலம் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு தனது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு கிட்டியது.

## 01. சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள

### • சனிதா வாசனாவ

சனிதா வாசனா லொத்தர் சீட்டின் 3255 ஆம் சீட்டிழுப்புக்கான விசேட சீட்டிழுப்பொன்று **2019 அக்டோபர் மாதம் முப்பதாம் திகதி (புதன்கிழமை)** நடாத்தப்பட்டதுடன் இவ்விசேட சீட்டிழுப்பு தினத்தில் 2.2 மில்லியன் லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. இதற்கு சமாந்தரமாக **2019 நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி** வரையிலான காலப்பகுதியில் பல சிறு சீட்டிழுப்புகள் நடாத்தப்பட்டன.

மேலும், **2019 மார்ச் மாதம் 29ஆம் திகதி (புதன்கிழமை)** 3166 ஆம் சீட்டிழுப்பு நிகழ்வில் விசேட சீட்டிழுப்பொன்று நடாத்தப்பட்டதுடன் 2.1 மில்லியன் லொத்தர் சீட்டுக்கள் விற்பனையானது டன் 2019 பிப்ரவரி 23ஆம் தேதி சனிக்கிழமை நடைபெற்ற 3152 ஆம் சீட்டிழுப்பிற்காக நடாத்தப்பட்ட விசேட சீட்டிழுப்பில் 2.2 லொத்தர் சீட்டுக்கள் விற்பனையாகிருந்தன

### • லக்ன வாசனா

லக்ன வாசனா லொத்தர் சீட்டுகளுக்கு காணப்படும் பெரும் வரவேற்பு காரணமாக 2019 ஜனவரி **17ஆம் திகதி (வியாழக்கிழமை)** லக்ன வாசனா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதனுடன் இரண்டு இலக்கங்களுக்கான பரிசுத்தொகையை ரூபாய் 100 வரை உயர்த்தப்பட்டது. லக்ன வாசனா லொத்தர் சீட்டுகளுக்கு விற்பனைச் சந்தையில் காணப்படும் பெரும் வரவேற்பினை கருத்திற்கொண்டு இந்த லொத்தரின் **சனிக்கிழமை** சீட்டிழுப்பு மற்றும் **திங்கட்கிழமை** சீட்டிழுப்பு என்ற வகையில் முறையே **2019 ஆகஸ்ட் மாதம் மூன்றாம் தேதி (சனிக்கிழமை) மற்றும் ஆகஸ்ட் 5ஆம் திகதி (திங்கட்கிழமை)** சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டன. இந்தப் புதிய மாற்றத்தை அடுத்து லக்ன வாசனா லொத்தர் சீட்டிழுப்பு கிழமையில் 7 நாட்களும் நடத்தப்பட்டுள்ளன." டபிள் சான்ஸ்" எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட மாதாந்த சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது அடுத்து லக்ன வாசனா லொத்தர் சீட்டிழுப்பின் ஏழு நாள் நேர அட்டவணை ஆரம்பிக்கப்பட்டது.

லக்ன வாசனா வர்த்தகக் குறியீட்டினை மேம்படுத்துவதற்கும் கிழமையில் ஏழு நாட்களிலும் சீட்டிழுப்பினை நடத்துவதற்காக **2019 ஆகஸ்ட் 31ஆம் திகதி (சனிக்கிழமை)"** லக்ன வாசனா சுபிரி தனயோகய" எனும் விசேட சீட்டிழுப்பும் ஒழுங்கு செய்யப்பட்டது. அபிவிருத்தி லொத்தர் சபைக்கு இந்த விசேட சீட்டிலுப்பு காரணமாக ரூபாய் **1.8** மில்லியன் பெறுமதியுடைய லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்து சாதனை படைப்பதற்கு ஆற்றல் கிட்டியது.

### • கோடிபதி கப்ருக

கோடிபதி சனிதா லொத்தருக்காக அபிவிருத்தி லொத்தர் சபை **2019 ஏப்ரல் 29 ஆம் திகதி ( செவ்வாய்க்கிழமை) கோடிபதி அவுருத்த)** எனும் பெயரில் சீட்டிழுப்பொன்றை நடாத்தியது. இந்த விசேட சீட்டிழுப்புக்கு 2.1 மில்லியன் லொத்தர் சீட்டுகள் விற்பனையாகின. இதற்கிடையில் அபிவிருத்தி லொத்தர் சபையின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் " வின் என் டிரைவ்" எனும் பெயரில் மற்றுமொரு சீட்டிழுப்பு **2019 ஜூலை மாதம் முப்பதாம் திகதி (சனிக்கிழமை)** நடாத்தப்பட்டது. இந்த சீட்டிழுப்பிற்கு அபிவிருத்தி லொத்தர் சபை **2.2** மில்லியன் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்தது.

"கோடிபதி சனிதா" லொத்தரை மக்கள் மத்தியில் பிரபல்ய படுத்தும் நோக்கில் **2019 ஆகஸ்ட் மாதம் இரண்டாம் தேதி (வெள்ளிக்கிழமை)** முதல் இந்த லொத்தர் "கோட்டிபத்தி கப்ருக" எனும் புதிய அடையாளத்துடன் சந்தையில் வெளியிடப்பட்டது. இந்த சின்னத்தில் இளஞ்சிவப்பு, பச்சை, மற்றும் மஞ்சள் உள்ளிட்ட பல புதியநிறங்கள் உள்ளடங்கி இருந்தன. இதற்கு ஒத்த வகையில் **2019 ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி முதல் 2019 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதி** வரையிலான காலப்பகுதியில் **"வாசி தஹச"** எனும் பல சிறிய சீட்டிழுப்புகள் நடாத்தப்பட்டன.

விற்பனையை மேலும் உயர்த்திக் கொள்ளும் நோக்கில் **2019 நவம்பர் மாதம் 29ஆம் திகதி (வெள்ளிக்கிழமை)** "கார் என்ட் கேஷ்" விசேட விசேட சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது. அன்றைய தினம் 2.1 மில்லியன் லொத்தர் சீட்டுக்கள் விற்பனையாகின.

### • ஜயோதா

ஜயோதா லொத்தரின் சீட்டிழுப்பு வழமைபோல திங்கள் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் நடாத்தப்பட்டாலும் சீட்டிழுப்பு கால அட்டவணை திருத்தப்பட்ட பின்னர் 2019 ஆகஸ்ட் 5ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதன் சீட்டிழுப்பு திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நடாத்தப்படுகின்றது.

### • சங்வர்தன வாசனா

சங்வர்தன வாசனா லொத்தர் சீட்டிழுப்பு புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டதுடன் 2019 ஆகஸ்ட் 2 ஆம் திகதி முதல் அச் சீட்டிழுப்பு வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் வகையில் திருத்தப்பட்டது.

### • அத கோடிபதி

2019 ஜுன் 28ஆம் திகதி (வெள்ளிக்கிழமை)" அத விசேஷ கோடிபதி" எனும் விசேட சீட்டிழுப்பு நடத்தப்பட்டதுடன் அதில் ரூ. 2.1 மில்லியன் பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் விற்பனையாகின. 2019 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி (செவ்வாய்க்கிழமை) அத விஷேச கோடிபதி எனும் மற்றுமொரு விசேட சீட்டிழுப்பு நடாத்தப்பட்டதுடன் அதில் ரூ. 2.14 மில்லியன் பெறுமதியான லொத்தர் சீட்டுகள் விற்பனையாகின.

ஜுலை ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அதிகமான விற்பனையை பதிவு செய்த விற்பனை முகவர்களை பாங்கோக் நகரத்திற்கு அழைத்துச் செல்வதற்கான ஒரு சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயணம் அத கோட்டிபதி லொத்தர் சீட்டுகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் அபிவிருத்தி லொத்தர் சபையின் விற்பனை பிரதிநிதிகளை ஊக்குவிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.

அத கோட்டிபதி பிரதான சீட்டிழுப்பு க்கு மேலதிகமாக 2020ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2020 அக்டோபர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சல்லி சமய எனும் பெயரில் சிறிய சீட்டிழுப்பு ஒன்றும் நடத்தப்பட்டது.

### • உடனடி லொத்தர்

உடனடி லொத்தர் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் சிஹின கெதெல்ல/ சிறி நிவச" எனும் பெயரில் ஒரு உடனடி லொத்தர் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதன் பரிசாக வீட்டுத் தளபாடங்கள் வழங்கப்பட்டன.

## 02. 2019 ஆம் ஆண்டிற்கான சந்தைப்படுத்தல் விநியோகத்தர்கள் மற்றும் விற்பனை முகவர்களை நியமித்தல்

| மாவட்டத்தின் இலக்கம் | மாவட்ம் | விற்பனை விநியோகத்-தர்கள | விற்பனை முகவர்கள் |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | | 17 |
| 02 | களுத்துறை | | 06 |
| 03 | கண்டி | | 09 |
| 04 | மாத்தளை | 02 | 01 |
| 05 | நுவரெலியா | | 01 |
| 06 | காலி | | 05 |
| 07 | மாத்தறை | | 02 |
| 09 | யாழ்ப்பாணம் | | 00 |
| 10 | மன்னார் | | 00 |
| 12 | மட்டக்களப்பு | | 01 |
| 13 | அம்பாறை | 01 | 00 |
| 14 | திருகோணமலை | 01 | 00 |
| 15 | குருநாகல் | | 06 |
| 16 | புத்தளம் | | 03 |
| 17 | அனுராதபுரம் | | 00 |
| 19 | பதுளை | | 00 |
| 20 | மொணராகலை | | 01 |
| 21 | இரததினபுரி | | 03 |
| 22 | கேகாலை | | 07 |
| 23 | கம்பஹா | | 08 |
| 24 | அம்பாந்தோட்டை | | 03 |
| 25 | பொலநறுவை | | 01 |
| 26 | முல்லைத்தீவு | | 01 |
| | | 04 | 78 |

## 03."டீ.எல்.பீ அபிமன" விற்பனை முகவர் சந்திப்பு

அபிவிருத்தி லொத்தர் சபை 2019ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் விற்பனை முகவர்களுக்கான சந்திப்பொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## 04. சந்தைப்படுத்தல் முகவர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் உதவியாளர்களின் பயன்பாட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- 2018 ஆம் ஆண்டில் லொத்தர் சீட்டுகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் 266 விற்பனைக் கூடங்கள் வினியோகிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் சென்று மேலும் 274 விற்பனைக் கூடங்கள் வழங்கப்பட்டன. ஒரு விற்பனைக் கூடத்தின் பெறுமதி ரூ.43,000 ஆக இருப்பதுடன் இதற்கமைவாக 2019 ஆம் ஆண்டில் கருத்திட்டத்திற்கு ரூ. 1,178,200.00 பணத் தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

- கருத்திட்டத்தை நிறைவு செய்த பின்னர் விற்பனை முகவர்களுக்கு மத்தியில் 250 விற்பனை கூடங்களை விநியோகிக்கும் மற்றுமொரு கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இவ்விடயத்தில் ஒரு விற்பனைக் கூடத்தின் பெறுமதி ரூ.46,000.00 ஆகும். இதற்கமைவாக இந்த கருத்திட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட மொத்த பணத் தொகை ரூ.11,500,000.00 ஆகும்.

- 2019 ஆம் ஆண்டில் 255 விற்பனைக் கூடங்களில் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு ரூ.3,825,000.00 பணத் தொகை (ஒரு கூடத்திற்கு ரூ.15,000.00 வீதம்) செலவு செய்யப்பட்டுள்ளது.

- 2019ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை நாடளாவிய ரீதியில் 129 விற்பனைக் கூடங்களுக்கு 129 வர்த்தக சின்னத்தைக் கொண்ட ஸ்டிக்கர்களை வழங்கி முழு அனுசரணை வழங்கியது.

- நாடளாவிய ரீதியில் பரந்துபட்டு இருக்கும் விற்பனை முகவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை 2018 ஆம் ஆண்டில் “லொத்தர் விற்பனை நிலையங்கள்” அமைப்பதற்கு அனுசரணை வழங்கும் கருத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது. 2019 ஆம் ஆண்டிலும் அபிவிருத்தி லொத்தர் சபை இந்த கருத்திட்டத்திற்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கியது.

பயனுறுதி மிக்க இடர்வரு நிலை முகாமைத்துவம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழில் முயற்சி செயன்முறையின் பிரதான அம்சமாகும். எமது தொழில் முயற்சியில் இடர்வரு நிலைகள் மற்றும் பெறுபேறு களுக்கு இடையில் பொருத்தமான சமநிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலுக்குள் எமது வளர்ச்சிக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் உதவி அளிக்கும் இடர் வரும் நிலை சார்ந்த முகாமைத்துவ ஆற்றல்கள் தொடர்ச்சியாக மேம்படுத்திக் கொள்வதற்கு முயன்று வருகின்றோம். இடர்வரு நிலை முகாமைத்துவம் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்படுத்தல் கட்டமைப்பின் பிரதான அம்சமாகும். முகம் கொடுக்க தயார் நிலையில் இருக்கின்ற இடர் வரும் நிலை மட்டத்திற்குள் இடர் வரும் நிலைக்கு இலக்காகக் கூடிய விடயங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக ஈட்டிக் கொள்ளுகின்ற வருமானம் மற்றும் மூலதனத்தின் பாதகமான அசைவுகளை கட்டுப்படுத்திக்கொள்வதற்கு நாம் முயன்று வருகின்றோம்.

இடர் வரும் நிலைகளை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் அவற்றை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கு பொறுப்புமிக்க அணுகுமுறையொன்று அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர்வரு நிலை முகாமைத்துவ முறைமையில் உள்ளடங்குகின்றது. இடர் வரும் நிலையினை பற்றி விழிப்புணர்வூட்டும் நடத்தைகளுக்கு உதவி வழங்கும் உறுதியான இடர் வரும் நிலை முகாமைத்துவ கலாசாரம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன்மூலம் இடர்வரு நிலைகளின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உந்து சக்தியை வழங்குதல் தொடர்பாக எமது கவனம் பிரதானமாக செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி லொத்தர் சபையின் நீண்டகால நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு நாம் எமது இடர் வரும் நிலை தொடர்பான மூலோபாயங்களை மேலும் விருத்தி செய்கின்றோம்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் இடர் வரும் நிலை முகாமைத்துவ மூலோபாயமானது விசேட தரப்புகள், முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கான பின்னூட்டல் முறைமையாக செயற்படுகின்றது. சபையின் தொழில் முயற்சி தொழிற்படுத்தல்கள் முறைமை மற்றும் சேவைகள் சார்ந்ததாக விழிப்புணர்வுடன் தீர்மானம் மேற்கொள்ளும் மூலோபாய புள்ளியாக அதற்கு கிடைக்கும் அந்தஸ்த்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது பின்வரும் விடயங்கள் ஊடாக தொழில் முயற்சி இடர் வரும் நிலைகளுக்கு பதில் அளிப்பதற்கு மூலோபாய மற்றும் தொழில்முயற்சி, திட்டமிடல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில் முயற்சி செயன்முறை ஆகியவற்றுக்கு நிலையானதொரு அணுகுமுறையை வழங்குகின்றது.

- வணிக செயற்பாடுகள் மற்றும் அலகுகள் ஆகியவற்றில் காணப்படும் இடர் வரும் நிலை தொடர்பாக பொதுவான புரிதலை வழங்குதல்
- முன்னேற்றம் அடைந்துள்ள முன்னுரிமைகளை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கு வசதி அளிக்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு தொடர்ச்சியாக இடர்பாடு நிலை தொடர்பான மதிப்பீடு ஒன்றை வழங்குதல்
- ஊழியர்களின் விழிப்புணர்வு மற்றும் முகாமைத்துவ பொறுப்புக்களை அதிகரித்தல்

அபிவிருத்தி லொத்தர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனித்துவமான சில இடர் வரும் நிலைகளுக்கு உள்ளாகின்றது.

## பரிசுகளை வழங்குவதில் இடர் வரும் நிலை

அனைத்து மொத்த மட்டத்திலும் பரிசுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விகிதமொன்றை பேணிக் கொள்ளுதல் வேண்டும். இவ்விடயத்தில் காசுப் பாய்வுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய சம்பவங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காரணமாக அதிக விலை விகிதமொன்று காணப்படுவதற்கான இடர் வரும் நிலை தோன்றக்கூடும். மேற்படி இடர் வரும் நிலையினை கையாளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை அச்சகங்களில் இருந்து காப்புறுதி ஒன்றையும் பெற்றுக் கொள்ளுகின்றது.

## பொருளாதார இடர் வரும் நிலை

அபிவிருத்தி லொத்தர் சபையின் வாடிக்கையாளர்களின் கொள்வனவு போக்குகள் நாட்டில் காணப்படும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களினால் ஏற்படுத்தப்படும் உந்துசக்தியின் மீது தங்கியிருக்கின்றது.

## நிதிசார் இடர் வரும் நிலை

வினைத் திறனற்ற காசு பாய்வு முகாமைத்துவம் மற்றும் நிதி தகவல்கள் ஆகியவற்றின் இடர் வரு நிலை ஊடாக நிறுவனத்தின் இலாபத்தன்மை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றிற்கு குந்தகமான நிலைமை ஏற்படுத்தக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை உரிய காப்புறுதி ஏற்பாடுகளை உறுதி செய்வதன் ஊடாக நிறுவன முழுவதிலும் கிரயத்தை கட்டுப்படுத்தும் மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல் போன்ற சம்பிரதாயமான நிதி இடர் வரும் நிலை முகாமைத்துவ நடைமுறைகளை பயன்படுத்துகின்றது.

## திரவத் தன்மை சார்ந்த இடர் வரும் நிலைகள்

உயர் மட்டத்திலான பரிசுகளை முன்கூட்டியே ஈட்டிக் கொள்வதன் ஊடாக நிதி திரவநிலை தொடர்பான இடர் வரும் நிலைகள் ஏற்படக்கூடும். இவ்வாறான

இடர் வரும் நிலைகளை இயன்றளவு குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை ன நிதி சொத்துக்களை உயர்மட்டத்தில் பேணி வருகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தீர்க்கவேண்டிய வேண்டியவைகளை தீர்ப்பதற்கான ஆற்றலை கொண்டு இருந்தபோதிலும் சபையினால் செலுத்தப் படுவதற்கு கடப்பாடு கொண்டுள்ள கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது அவற்றை செலுத்தி தீர்ப்பதற்கு போதியளவு நிதி வளங்களை பேணி வருவதற்கு அல்லது உருவாக்கிக் கொள்வதற்கு இயலாதவிடத்து அல்லது கணிசமானளவு பாதகமான நிலையின் கீழ் அவற்றைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் போது மாத்திரம் திரவ நிலை தொடர்பான இடர் வரும் நிலைமை தோன்றுகின்றது.

## தொழிற்படுத்தல் இடர் வரும் நிலை

முறைமைகள் செயலிழந்து போகுதல் தனி நபர்களினால் ஏற்படக்கூடிய தவறுகள் குற்றவியல் சார்ந்த செயற்பாடுகள் அல்லது உள்ளக முறைமைகள் செயலிழப்புக்கு உள்ளாகுதல் ஆகியவை காரணமாக ஏற்படக்கூடிய நட்டங்கள் தொழிற் படுத்தல் இடர் வரும் நிலையின் கீழ் வருகின்றது. அவ்வாறான நிலைமைகளின் காரணமாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கும் நிறுவனத்தின் நன் மதிப்பிற்கும் பாதகமான நிலைமைகள் ஏற்படக்கூடும். தொழிற்படுத்தல் இடர் வரும் நிலையினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ச்சியாக உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துகின்றது. நிறுவன ரீதியிலான இடர் வரும் நிலைகளில் ஊடாக ஏற்படும் அச்சுறுத்தல்களை இயன்றளவு குறைப்பதற்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் முகாமைத்துவத்தினால் தொழிற்படுத்தல் கூறுகள், வணிக செயன்முறைகள் மற்றும் பாரிய அளவிலான கூறுகள் தொடர்பாக தொடர்ச்சியாக இடர் வருநிலை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது.

## வணிக இடர் வரும் நிலை

வணிக இடர் வரும் நிலை மூலோபாய மற்றும்∴ அல்லது நற்பெயர் சார்ந்த காரணங்களினால் விளையும் கிரயத்தின் அடிப்படையுடன் ஒப்பிடுகையில் ஏற்படக்கூடிய வருமான பற்றாக்குறைக்கு ஏதுவானதாகும். ஏனைய மேலதிக விடயங்களை நோக்குகையில் வெளி வாரியான பேரண்ட பொருளாதார சூழல் அபிவிருத்தி லொத்தர் சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற மூலோபாயம் மற்றும் சபையானது தொழிற்படும் சந்தைக்குள் அதற்கு காணப்படும் நற்பெயர் சபையின் வருமானத்தை ஈட்டும் ஆற்றலின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது..

## நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலை

பங்குதாரர்கள் மத்தியில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நற்பெயருக்கு பாதகமான நிலை ஏற்படுதல் காரணமாக நற்பெயருக்கு இடர் வரும் நிலை ஏற்படக்கூடும் என்பதுடன் அதன்மூலம் வணிகத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் உள்ள ஆற்றல் பாதிக்கப்படுகின்றது. நம்பகத்தன்மை புரிதல் மற்றும் வணிக ரீதியிலான தொடர்புகள் வீழ்ச்சி அடைவதன் ஊடாக அவ்வாறானதொரு பாதக நிலைமை ஏற்படக்கூடும்.

அபிவிருத்தி லொத்தர் சபை கட்புல ஊடகங்கள் மற்றும் பொது நலன் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து செயற்படுவதன் காரணமாக சபை கணிசமானளவு நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலைக்கு உள்ளாகின்றது. இந்த இடர் வரும் நிலையை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை பொது நலனை தக்கவைத்துக் கொள்வதற்காக பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் சணிகங்களை நடைமுறைப்படுத்துவதுடன் பெருமளவில் முறைமை சார்ந்த வெளிப்படைத்தன்மையை பின்பற்றி செய்யப்படுகின்றது.

## சட்டம் சார்ந்த இடர் வரு நிலைகள்

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய எதிர்கால சட்ட நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் சட்டம் சார்ந்த பாதக நிலைமைகள் ஏற்படக்கூடிய இடர் வரும் நிலை அதிகரிக்கக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை அங்கீகாரமுடைய சட்ட தொழில்வாண்மையாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அவ்வாறான நடவடிக்கைகளை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடர்வரு நிலைகள்

தகவல் தொழில்நுட்ப முறைமைகள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற திட்டவட்டமான தும் காலோசிதமானதுமான தகவல்கள் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாட்டு செயல்முறைகளின் அடிப்படை அம்சமாகத் திகழ்கின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தனது தகவல் தொழில்நுட்ப முறைமையை மேம்படுத்துவதற்கு செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி உள்ளது.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

2019 டிசம்பர் 31ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டிற்கான எமது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் நாம் சமர்ப்பிக்கின்றோம்.

## கணக்காய்வுக் குழுவினர்

கணக்காய்வுக் குழு பின்வரும் மூன்று (03) நிறைவேற்று பதவியல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது

| | |
|---|---|
| 1. திரு. H.C.D.L. சில்வா | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தலைவர் |
| 2. திரு. D.N. நானாயக்கார | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர் |
| 3. திரு. M.P. பண்டார | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர் |

பொது முகாமையாளர் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் - பிரதி பொது முகாமையாளர் - நீதி உள்ளகக் கணக்காய்வாளர் உதவி பொது முகாமையாளர் மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் ஏனைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் கட்டாயமானதாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் கணக்காய்வு அதிகாரி இக்குழுவில் அவதானிப்பாளாராக இக்கூட்டங்களில் பங்கேற்பார்.

## கணக்காய்வு குழுவின் வகிபாகம்

பங்கீடுபாட்டாளர்களின் கரிசனைகளையும சபைக்கு சொந்தமான சொத்துக்களையும் பாதுகாத்து கொள்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை பேணி வருதல் வேண்டும். நிதி அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விடுக்கப்படும் வழிகாட்டுதல்களையும் குழு பின்பற்றுகின்றது. 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் கணக்காய்வு குழுவினால் அதன் பிரதான பொறுப்புகளுக்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

1. ஆண்டுக்கான நிதி கூற்றுகளை வெளியிடுவதற்கு முன்னர் கூற்றுகளின் இசைந்தொழுகும் தன்மையையும் முழுமையையும் ஆராய்ந்தறிதல் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள முக்கியமான நிதி அறிக்கையிடல் கலை மீளாய்வு செய்தல். கணக்கீட்டு நியமங்கள் குறிப்புகள் வழக்கங்கள் தீர்மானங்கள் தேவைப்படுகின்ற பிரதான துறைகள் மற்றும் சட்ட அத்துடன் ஒழுங்குறுத்தல் தேவைகளுக்கு இசைந்தொழுகுவதை மீளாய்வு செய்தல் இதில் உள்ளடங்குகின்றன. நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதனூடாக கண்டறியப்பட்ட விடயங்களை மீளாய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தது.

1. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு உள்ளக கணக்காய்வு தொடர்பான காலத்துக்குரிய கணக்காய்வு அறிக்கைகள் உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக சபையின் இயங்கு நிலையில் காணப்படும் முறைமைகள் மற்றும் நடவடிக்கை முறைகளில் உள்ள குறைபாடுகள் வலியுறுத்தப்பட்டு சுட்டிக்காட்டப் படுவதுடன் விதப்புகைளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் தேவையான சந்தர்ப்பங்களில் தற்போது உள்ள நடைமுறைகள் மற்றும் செயல் ஒழுங்குகளை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு குழுவுக்கு முன்னேற்றம் அறிக்கை இடப்படுகின்றது. கணக்காய்வு குழுவிற்கு உள்ளக கணக்காய்வு மூலம் தொடர்ச்சியாக அறிக்கைகள் கிடைப்பதுடன் அக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வின் மூலமும் கண்டறியப்பட்ட பிரதான விடயங்கள் தொடர்பான ஒரு சாராம்சமும் மேற்படி அறிக்கையில் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவத்தின் கருத்துக்களும் அதில் ஒரு பகுதியாக அமைவது உடன் கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ள நிலைமைகளுக்கு காரணமாக அமையும் அடிப்படை விடயங்கள் மட்டும் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளும் குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

2. உள்ளக கணக்காய்வினதும் அரச கணக்காய்வினதும் உதவியுடன் குழு சபையின் தொழிற்படுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளின் பயனுறுதியை மதிப்பீடு செய்வதுடன் அவற்றின் செலவு, வருமான செயன்முறைகள் மூலதன செலவினத்திற்காக அனுமதி வழங்கும் வரம்புகள், கையொப்பமிடும் அதிகாரிகள், தகவல் தொழில்நுட்ப உள்ளீடுகளின் கட்டுப்பாடு மற்றும் விருத்தி செய்தல், தாபனத்தின் கட்டமைப்பு, கொள்கைகள் கடமைகளை ஒதுக்கிக் கொடுத்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுகள் உள்ளடங்குகின்றன. சபையின் நிதி நிலை கூற்றில் திரவத் தன்மை தொடர்பாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது. அங்கு இனங்காணப்பட்ட குறைபாடுகள் தேவையான மேம்படுத்த ளுக்கான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடப்படுகின்றது. அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினால் கொடுக்கப்படுகின்ற பணிப்புரைகள் மீது குழு விசேட கவனத்தைச் செலுத்துகின்றது.

## நடாத்தப்பட்ட கணக்காய்வு குழு கூட்டங்களின் எண்ணிக்கை

2019 ஆம் ஆண்டில் 5 கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதற்கு வருகை தந்தவர்கள் பின்வருமாறு.

| பணிப்பாளரின் பெயர் | வருகை | விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் |
|---|---|---|
| திரு. H.C.D.L. சில்வா | 05/05 | இல்லை |
| திரு. D.N. நானாயக்கார | 05/05 | இல்லை |
| திரு. M.P. பண்டார | 05/05 | இல்லை |



**எச்.சீ.டீ.எல் சில்வா**
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

# நிதித்துறை தகவல்கள்



## உள்ளடக்கம

நிதிசார் அறிக்கை


சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை |44
விரிவான வருமானம் பற்றிய கூற்று|65
நிதி நிலை பற்றிய கூற்று|66
காசுப் பாய்வுக் கூற்று|67
உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று|68
கணக்கீட்டு கொள்கைகள் |69
இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள் |76
பத்தாண்டுக்கான பொழிப்பு |88

# சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

**சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை**

தலைவர்

அபிவிருத்தி லொத்தர் சபை

2019 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் சபையில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1. அபிப்பிராயம்**

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2019 டிசம்பர் 31ம் திகதிகளில் உள்ள வாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்வுக் கூற்று மற்றும் 2019 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்ந்த இத்துடன் காணப்படும் நிதிக்கூற்றுக்களினால் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் நிதி நிலை மற்றும் அன்றைய தினம் நிறைவுபெற்ற ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்வு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை எடுத்துரைக்கின்றதென்பதே எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07

முறையே ரூபாய் 15,075,390 பணத்தொகை மற்றும் ரூ.29,515,418 பணத்தொகை இடர் கடன் கிடைப்பனவுகள் மற்றும் செலுத்தல்கள் காசுப் பாய்வுக் கூற்றின் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் புறம்பாக காட்டப்படாமல் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

**1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) 10 19 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த கணக்குகளுக்கு அமைவாக நடைமுறையிலிருந்த வேலைகள் மற்றும் முற்பணங்கள் என குறிப்பிடப்பட்டிருந்த முறையே ரூ. 1,583,595 மற்றும் ரூ.2,074,958 ஆகிய பணத்தொகை 2014ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இருந்து வந்த இடை நிறுத்தப்பட்ட நிர்மாண பணிகளுக்கு செலவு செய்யப்பட்ட பற்றாக்குறை நிலுவையாக இருந்தது. இந்த பெருமதி காண கணக்குகள் தேவையான திருத்தங்கள் செய்யப்படாமல் அப்பெரு மதி மேலும் 5 வருட காலத்திற்கு கணக்குகளில் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேலும் கைவிடப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு செலவு செய்யப்பட்ட மற்றுமொரு ரூ.1,325,805 பணத் தொகை ஆதனங்கள் இயந்திர நிலையங்கள் மற்றும் உபகரணங்கள் எனும் தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது டன் அதற்கு ஏதுவான பெறுமதி ஆதன கணக்கிலிருந்து அகற்றப்பட்டு எவ்வித

நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இருந்தது. ஆகவே மேற்படி சொத்துக்களின் பெறுமதி அதன் பெறுமானத்தை விட அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமல்லாத காணியில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு செலவிடப்பட்ட ரூ.492,392 பணத் தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது டன் அப்பணத்தொகை திஸ்ஸமகாராம பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த பணத்தொகை என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக ஆதனங்கள் எந்திர நிலையங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது நடைமுறையை சொத்துக்களின் பெறுமதி குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வு ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த ஒரு பணிக்காக 2020 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டிருந்த ரூ.1,421,?842 பணத் தொகை மீனா இவ்வாண்டில் தொழிற்படும் நிலையிலிருந்த வேலைகள் மற்றும் கடன் கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த இறுதி இருப்புக்களில் ரூ.2,853,172 பெறுமதியுடைய பயன்படுத்த இயலாத இருப்புகள் உள்ளடங்கி இருந்ததுடன் இதன் காரணமாக இறுதி இருப்பில் அதற்கு சமமான பெருமதி அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(உ) விளம்பர வண்டியொன்றை அமைப்பதற்காக தொடர்ந்தும் செலுத்த வேண்டியிருந்த ரூ.1,515,300 பணத் தொகை கணக்கு வைக்கப்படாமல் இருந்ததுடன் இதற்கமைவாக சாதனங்கள் இயந்திர நிலையங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவுகளுக்கான கணக்குகளில் அதற்கு சமமானதொரு பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள முன்னைய வருடத்தில் லொத்தர் சீட்டுகளை அச்சிடுதல் தொடர்பான ரூ.732,951 செலவினக் கணக்கு மீதி தொடர்பாக உறுதிப்படுத்தக் கொள்ளக்கூடிய சான்றுகள் இல்லாத காரணத்தினால் இந்த உருப்படி திருப்தி அடையக் கூடிய வகையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அத்தாட்சிப்படுத்திக் கொள்வதற்கு இயலாதிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக என்னால் கணக்காய்வு கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்தல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதுமானதாகவும் பொருத்தமானதாகும் இருக்கின்றது என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாக இருப்பவர்களின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை அரசுத் துறையின் கணக்குகளுக்கான நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயம் ஒன்றை சமர்ப்பிக்கும் வகையில் நிதி கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது நிறுவனத்தை இடையறாமல் பேணி வரும் பொருட்டு நிறுவனம் கொண்டிருக்கும் ஆற்றலை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவம் நிறுவனத்தை கலைப்பதற்கு கருதுமாயின் அல்லது வேறு மாற்று வழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் தவிர்ந்த இடையறாத இருப்பின் அடிப்படையில் கணக்கு வைப்பதற்கும் நிறுவனத்தின் இடையறாத இருப்புக்கு ஏதுவான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை செய்தல் சபையின் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பாக இருக்கும் தரப்புகளின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவிற்கு அமைவாக சபையின் வருடாந்த மற்றும் விடயத்துக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு ஆற்றல்

கிட்டும் வகையில் சபையானது தனது வருமானம் செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய முறையில் பதிவேடுகளையும் அறிக்கைகளையும் பேணி வருதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்தல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புகள்**

---

நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையின் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதென நியாயமான துரு உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றொன்று எனது அபிப்பிராயம் உள்ளடங்கியதாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றதெனினும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு களை மேற்கொள்ளும்போது அது பொருண்மையில் பிறழ் கூற்றுக்களை கொண்டிருக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவை கண்டறியப்படுகிறது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமைவதில்லை. ஊழல்கள் மற்றும் தவறுகள் தனித்தனியாக அல்லது ஒட்டுமொத்தமாக தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையில் பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன் இதன் மூலம் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு இவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கம் ஏற்படக்கூடும் என்பதை நியாயமாக எதிர்பார்க்க முடியும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் கணக்காய்வு முழுவதிலும் தொழில்வாண்மை சார்ந்த தீர்ப்புகள் மற்றும் தொழில்வாண்மை சார்ந்த ஐயங்களுடன் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி மற்றும் ஊழல் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையில் பிறழ் கூற்றுக்களில் இடர்வரு நிலையினை அடையாளம் கண்டு கொள்ளுதல் அத்துடன் மதிப்பிடுதல், அத்தகைய இடர் வரும் நிலைகளுக்கு பதிலளிக்கின்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்துதல், மற்றும் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையில் வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மேற்கொள்ளப்படுகின்றது. தவறான கூட்டு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதல், தவறாக குறிப்பிடுதல், உள்ளக கட்டுப்பாட்டுகளை தவிர்த்துக்கொள்ளுதல் போன்றவை மோசடிகள் எனும் விடயத்தின் கீழ் வருவதால் தவறு காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையில் பிறழ் கூற்றுக்கள் கண்டறியப்படாததால் ஏற்படும் இடர் வரும் நிலையை பார்க்கிலும் மோசடி காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையின் பிறழ் கூற்றுக்கள் கண்டறியப்படாமையினால் ஏற்படக்கூடிய இடர் வரும் நிலை அதிகமானதாகும்.
- சபையின் உள்ளக கட்டுப்பாடுகளில் பயனுறுதி தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவிப்பதற்கன்றி விடயத்துக்கு ஏற்றாற்போல் கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு கணக்காய்வு க்கு ஏதுவான உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்படுகின்றது.
- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்காய்வு நியமங்களின் பொருத்தப்பாடு மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு மதிப்பீடுகளிலும் சம்பந்தப்பட்ட கண்டறியப்பட்டவைகளின் நியாயத் தன்மை தொடர்பாக மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- முகாமைத்துவத்தினால் கணக்கு வைப்பதற்காக இடையறாத இருப்பை அடிப்படையாகக் பயன்படுத்திக்கொள்ளுதல் தொடர்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையிலும் தொழில் முயற்சி என்ற வகையில் இடையறாமல் இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கு சபை கொண்டுள்ள ஆற்றல்களைப் பற்றி குறிப்பிடத்தக்களவு ஐயங்களை ஏற்படுத்துகின்ற சம்பவங்கள் அல்லது நிலைகளுக்கு ஏதுவாக பொருண்மையில் நிச்சயமற்ற தன்மை ஒன்று உள்ளதா என்பதை பற்றி நிர்ணயிக்கப்படுகின்றது. அவ்வாறான பொருண்மையில் நிச்சயமற்ற தன்மை உள்ளதென என்னால் தீர்மானிக்கப்படுமிடத்து நிதிக் கூற்றுக்களில் சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் தொடர்பாக என்னால் எனது கணக்கு ஆய்வாளரின் அறிக்கையில் கவனம் செலுத்துதல் அல்லது அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக அமையாத விடத்து எனது கருத்தினை சற்று சீராக்கி கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் மற்றும் நிலைகள் சபைக்கு ஒரு தொழில் முயற்சி என்ற வகையில் இடையறாத இருப்பினை நிறைவு செய்வதற்கு காரணமாக அமையக்கூடும்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாக காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்யப்பட்டன.

ஏனைய விடயங்களுக்கு மேலதிகமாக எனது கணக்காய்வு கிடையில் ஆளுகை சார்ந்ததாக இனங்காணப்பட்ட ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் இருக்கும் ஆயில் அத்தகைய குறைபாடுகள் உள்ளிட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக கட்டுப்பாட்டுக்கான பொறுப்பு சாட்டப்பட்டுள்ள தரப்புகள் என்னால் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிற மனரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய் விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன் எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு சபை முறையான நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) () ஆம் பிரிவில் உள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட கூடியனவாகும்.

- இந்த அறிக்கையின் 1.2 , 2.1 (அ) (ஆ) (ஈ) 1.2 2.2 (அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ) (ஏ) 1.2 2.3 (அ) (ஆ) ஆம் பந்திகள் உள்ள கணக்காய்வு அவதானிப்புகளை தவிர்த்து 2018 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) () ஆம் பிரிவின் கீழ் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலும் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் அத்துடன் பொறுமையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பின்வரும் கூற்றுக்களை முன்வைப்பதற்கு ஏதுவான எந்த ஒரு விடயமும் எனது கவனத்திற்கு காணக் கூடியதாக இருக்கவில்லை.

-2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகள் இன் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளுக்கு வெளியே சபையினால் செய்து கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

-2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றை தவிர்த்து சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலாதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்

சட்டங்கள் விதிமுறைகள் / பணிப்புரைகளுக்கான தொடர்பு

| | |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | |
| எட்டாம் பந்தியின் 4.1 பிரிவு | கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு உரித்து இல்லை என நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்வு ஆண்டில் சபையின் கள உத்தியோகத்தர்களுக்கு ரூ. 1,122,318/- மேலதிக நேர கொடுப்பனவாக செலுத்தப்பட்டு இருந்தது.<br><br>தாபனக் கோடைக்கு அமைவாக 1/20 கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு பதவி யணி உத்தியோகத்தர்கள் கட்டாயமாக நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் உத்தியோகபூர்வ கடமைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தும் சபையின் லீவு நாட்களில் பதவியினை |

| | |
|---|---|
| | உத்தியோகத்தர்கள் பணியாற்றிய மணித்தியாலங்களின் படி அந்த உத்தியோகத்தர்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு ஒண்டரை மணித்தியாலம் எனும் விகிதத்துக்கு அமைவாக மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்த உத்தியோகத்தர்கள் அந்நாட்களில் நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பில் கலந்துகொண்டு அதற்காக செலுத்தப்படும் கொடுப்பனவை யும் பெற்றுக் கொண்டிருந்தனர். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணங்கள் | |
| (1) 272 (3) ஆம் நிதிப் பிரமாணம் | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுறுதி சீட்டுகளும் அத்தகைய செலவுறுதி சீட்டுக்களுக்கு ஏதுவான மாதம் நிறைவடைந்து ஆறு கிழமைகளுக்கு விஞ்ஞாத காலத்திற்குள் கணக்காய்வாளர் சமர்ப்பித்தல் வேண்டுமெனினும் சபை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்திற்கான செலவுறுதிச் சீட்டுக்களை சமர்ப்பிக்கும் போது ஒரு மாதம் முதல் 7 மாதங்கள் வரையிலான காலதாமதம் இடம்பெற்றிருந்தது. |
| (1) 15 ஜூலை 14ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 371(2) (ஆ) ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | ஒரு தடவையில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய இடைக்கால முற்பணத்தொகை ரூ.100,000.00 ஆக இருப்பினும் மீனாய்வாண்டில் இருபது தடவைகளில் அத்தகைய எல்லையை கடந்து ரூ. 3,481,827.00 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.<br>இடைக்கால முற்பணம் பதவி அணி தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படவேண்டுமாயினும் 2019 ஆம் ஆண்டில் பதவியணி தரத்தை சாராத உத்தியோகத்தர்களுக்கு ரூ.10,727,741 பெருமதியான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குரிய இடைக்கால முற் பணத்தை செலுத்தும்போது சம்பந்தப்பட்ட பணிக்கான மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டில் 219 சந்தர்ப்பங்களில் ரூ.1,680,806 நிதி சேமிப்பு பதிவாகியிருந்தது. |
| (2) 371(2) (இ) ஆம் நிதிப் பிரமாணம் | திட்டவட்டமான பணிக்கு கிடைத்த முற்பணம் சம்பந்தப்பட்ட விடயத்தின் பணிகள் நிறைவுற்ற உடனேயே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமெனினும் 2019 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் 12 சந்தர்ப்பங்களில் ரூ.650,500 முற்பணம் 18 நாட்கள் முதல் 47 நாட்கள் வரையிலான காலம் தாமதமாகிய பின்னர் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. |
| (ஈ) திறைசேரி சுற்றுநிருபங்கள் | |

| | |
|---|---|
| (3) 18 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு நிதி மற்றும் ஊடக அமைச்சின் செயலாளரின் 4/2008 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முடியெல்லாம் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டுதல்கள் | |
| 1.1.1. ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் ரூ.8,958,763 பெறுமதியுடைய 44 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டில் ரூ.7,882,371 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த Hyundai ரக மோட்டார் வாகனம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை பெற்றுக் கொண்டிருக்கவில்லை |
| 1.1.3 ஆம் பந்தி | ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகனங்கள் மூன்று வகுதிகளுக்கு வகைப்படுத்த வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் அவை மோட்டார் திணைக்களத்தின் மோட்டார் பரிசோதகர் ஒருவரும் சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரும் உள்ளடங்கும் வகையில் நிறுவனத் தலைவரினால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று பேரைக் கொண்ட குழுவினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறு செயற்படாமல் மேற்படி வாகனங்கள் மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |
| () 2015 ஜுலை 10 ஆம் திகதிய 02/2005 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்று நிருபத்தின் 9 ஆம் பந்தியின் (அ)பிரிவு | ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகனம் ஒன்றை அகற்றும் செயன்முறை அவ் வாகனத்தின் உரிமை நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்காவிடின் அவ் வாகனம் அவ்வாறு நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டில் விற்பனை முகவர் ஒருவருக்கு வழங்குவதற்கு ரூ.411,500 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டி பதிவு செய்யப்படாமல் 2017 ஜுலை மாதம் வரையில் அவரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்து பின்னர் அது சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அது இற்றைவரை பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் 2020 ஜுன் 29ஆம் திகதி அதனை அகற்றுவதற்கான கேட்பு விலை கோரப்பட்டிருந்தது. |

.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு சபை தனது தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளுக்கு இசைந்தொழுகும் வகையில் பணியாற்றாமை.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவின் பிரகாரம் குறித்து வைக்கப்பட்டுள்ளவாறு அடையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் பயனுறுதி மிக்க வகையிலும் குறிப்பிட்ட கால வரம்புக்குள் சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு இசைந்தொழுகும் வகையில் பெறுகையினை மேற்கொண்டு பயன்படுத்தாமை

(அ) பெறுகைகள் சார்ந்த தாமதங்கள்.

2018 ஆம் ஆண்டில் ரூபாய் 5,565,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பின்புறம் உடற்பகுதியற்ற இரண்டு சக்கரங்களைக் கொண்ட உசநற உயடி வாகனம் பிரச்சார வாகனமாக பயன்படுத்தப்படுவதற்கு 2018 அக்டோபர் மாதம் 18ஆம் தேதி ரு-ஞுசை நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2020 ஜூன் மாதம் 30ஆம் திகதியாகின்றபோது ஒரு வருடமும் எட்டு மாத காலமும் கடந்து இருந்தபோதும் அதுவரை அந்த லொறி வண்டிக்கான உடற்பகுதி சட்டத்தை அமைத்தல் , வெளி மேலுறையை அமைத்தல் பின் கதவுகளை பொறுத்துதல் என்ன விடயங்கள் மாத்திரமே செய்யப்பட்டுள்ளன. விற்பனை மேம்படுத்தல் வண்டி ஒன்றை கொள்வனவு செய்வதற்கு 10.2 மில்லியன் பணத் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதும் லொத்தர் டிக்கட்டுகளை ஏற்றிச் செல்வதற்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்றை திடீரென விற்பனை விளம்பர வண்டியாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் தொடர்பான வழிகாட்டல் களின் 2.6 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளை வருத்திக் கொள்ளாமல் விவரக்குறிப்பீடுகளை தயாரித்து கேட்பு விலை கோரப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்தச்சட்டத்தின் 6 (1) பிரிவில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு மாறாக வாகனத்தின் அளவும் மாற்றப்பட்டிருந்தது. இதற்கமைவாக பணிக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் ஒருவருட காலத்தில 8 மாத காலம் காலாவதியாகி இருத்தல் சொத்துக்கள் மற்றும் அதன் உட்கூறுகளின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் வாகனத்தை பதிவு செய்தல் தொடர்பான இடர்வரு நிலை மட்டுமே வினைத்திறன் பாதுகாப்பின் செல்லுபடி காலம் கடந்துள்ள மை ஆகிய காரணங்களின் விளைவாக ரூ.12,670,000 செலவினை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள மேற்படி தொழில் படுத்தல் செயற்பாடுகளை கணக்கு கூற்றுகளின் உரிய கணக்குகளின் வாயிலாக கண்டறிய இயலாமை சிக்கல் மிக்கதென கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கான அச்சகத்தை தெரிவுசெய்தல்

---

(i) 2013 சனவரி 02 ஆம் திகதிய 01/2013 இலக்கம் கொண்ட அத்துடன் 2017 அக்டோபர் மாதம் 09 ஆம் திகதிய 04 ஆம் இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் 2006 அரச பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 7,6,7.7.7.1 (அ), 795(இ), 7,8,9 (ஆ) (iii), 8.5.1 (அ) மற்றும் (ஆ) ஆகிய வழிகாட்டுதல்கள் மற்றும் 2008 டிசெம்பர் 17 ஆம் திகதிய අප/145/306/2356/08TRB இலக்கமுடைய அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவுசெய்ய வேண்டும் எனினும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கு அச்சகங்களை தெரிவு செய்யும்போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறான பல சந்தர்ப்பங்களில் பின்வருமாறு.

- அரச நிதி திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் பெறுகைகள் அளவுகோல்கள் உள்ளிட்ட பெறுகை ஆவணங்களை தயாரித்தல் காரணமாக சபைக்கு அனுகூலமாக அமையக்கூடிய அச்சக கம்பெனிகள் பெறுகைகள் செயன்முறையிலிருந்து விடுபடுதல்.

- கேட்பு விலையை மதிப்பிடுவதற்காக அமைச்சின தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு இசைந்தொழுகாத நிறுவனங்களை தெரிவு செய்தல்.

பதில் அளிக்காமல் இருந்த கேட்பு விலை முன் வைத்தவர்களை தெரிவு செய்தல்.

(ii) மேல்முறையீட்டுக்கு போதியளவு காலத்தை வழங்காமலும் மேன்முறையீடு களை நிராகரித்து பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 8.5, 8.5.1(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளை புறக்கணித்து அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்தை விலை கேட்பவர்களுக்கு அறிவித்தல்

(iii) சபையின் தலைவர் அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கத்தவராக இருப்பதுடன் பிரதி பொது முகாமையாளர் ( நிதி) அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராவார். இந்த விடயத்துக்கு பொறுப்பான பிரதி பொது முகாமையாளர் ( நிதி) மற்றும் உதவி பொது முகாமையாளர் ( நிதி) அச்சுப் பிழைகள் தொடர்பாக அறிந்திருந்தும் அச்சு நடவடிக்கையில் எவ்வித தவறும் இல்லை எனவும் இரண்டு வழங்குனர்கள் தொடர்பாகவும் குழுவுக்கு திருப்தி அடைய முடியும் என்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு தமது அறிக்கையில் அறிக்கையிடுதல்.

(iv) 2018 மார்ச் மாதம் 25ஆம் திகதி நடாத்தப்பட்ட கோடிபதி சனிதா லொத்தரின் 271 ஆவது சீட்டிழுப்புக்கு ஏதுவான லொத்தர் சீட்டுகளில் தவறான பரிசு முறையொன்றை அச்சிட்டதன் காரணமாக சபை ரூபா 320,000 மேலதிக பரிசு ஒன்றை வழங்குதல் ஒப்பந்தத்திற்கு அமைவாக சம்பந்தப்பட்ட அர்ச்சகர் கம்பெனியிடமிருந்து ரூ.320,000 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு தவறியமை மற்றும்

தவறான தரவுகளை அச்சிட்டதன் காரணமாக ரூ.500,000 பணத் தொகையை அறிவிட்டுக் கொள்வதற்கு இயலாமல் போகுதல்.

(v) மேன்முறையீடுகளை வரவழைப்பதற்கு வெற்றி பெறாத விலை கேட்பவர்களுக்கு அறிவிக்கும் கடிதங்கள் அனுப்பிய அமைச்சின் பெறுகைகள் குழுவின் தலைவராகிய தரப்பு மேன்முறையீட்டு சபையாக பணியாற்றிய ஒன்றிணைந்த குழுவின் தலைவராக பணியாற்றியமை மற்றும் அக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக ஒப்பந்தத்தை மீள வழங்குவதை அங்கீகரித்தமை. இவ்விடயங்கள் காரணமாக கணக்காய்வின் போது பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மை சந்தேகத்துக்கிடமாக தோன்றியது.

(இ) பரிசுகளை கொள்வனவு செய்தல்

---------------------------------------------------------

(i) சுப்பர் போல் விசேட லொத்தர் பரிசாக வழங்கப்படவிருந்த 20 செல்லிடத் தொலைபேசி களுக்கு ரூ.672,860 பணத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது டன் இந்து கொள்வனவு பெறுகை செயன்முறைக்கு மாறாக கொள்ளப்பட்டிருந்தது.

(ii) பெறுகை வழிகாட்டல்களின் 8.8.1 பந்தியின் (ஆ) பிரிவுக்கு அமைவாக ரூ.500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முறையான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமாயினும் அதகோடிபதி விஷேட லொத்தர் சீட்டிழுப்புக்கு ரூ.1,699,500 பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக அவ்வாறானதொரு இணக்கம் ஏற்படுத்தப்படவில்லை.

(ஈ) குடிநீர் போத்தல் கொள்வனவு (ரூ.1,911,663)

--------------------------------------------------------------------------

உரிய பெருமை செயல் முறையை பின்பற்றாமல் சபையானது குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டில் ஒரு நிறுவனத்தை தெரிவு செய்து கொண்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு திகதி வரையில் அந் நிறுவனத்திலிருந்து மாத்திரம் குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்திருந்தது.

(உ) உடனடி லொத்தர் விற்பனையை மேம்படுத்துவதற்கு டி-ஷர்ட் களை கொள்வனவு செய்தல்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

களஞ்சியசாலையில் போதிய அளவு இருப்பு இருந்தபோதிலும் மீண்டும் கொள்வனவு செய்தல் உரிய சந்தைப்படுத்தல் திட்டமொன்றுக்கு அமைவாக உடனடி லொத்தர்களை நடத்தாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட விளம்பர பொருட்களுக்கு உடனடி லொத்தர்களை அச்சிட்டு விநியோகிக்காமலிருத்தல் போன்ற காரணங்களின் விளைவாக லொத்தர் விற்பனை மேம்படுத்தலுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூ.9,075,040 பெறுமதியான 17,452 டீ சர்ட்கள் வெறுமனே வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) தீயணைப்பு கருவித் தொகுதியொன்றை கொள்வனவு செய்தல்

----------------------------------------------------------------------------------------------------

2019 ஆம் ஆண்டில் சபை ரூ.2,357,000 பணத் தொகையை செலவிட்டு தீயணைப்பு கருவி தொகுதியொன்றை நிறுவியுள்ளதுடன் அதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் கேட்பு விலைகளை கோரியுள்ளது. இதற்கான வழங்குநரை தெரிவு செய்து கொள்ளும் பெறுகை செயன்முறைக்கு சபையின் பெறுகை பிரிவின் நேரடி தலையீடு இல்லாத இருந்ததுடன் வழங்குநரை தெரிவு செய்து கொண்ட பின்னர் தீயணைக்கு சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தும் கேட்பு விலை கோரப்பட்டதற்கான எவ்வித சான்றுகளும் இல்லாத துடன் விலை கேட்போர் இரண்டு பேரில் ஒருவர் இதற்கு தெரிவுசெய்யப்பட்ட கம்பெனியினால் நிர்வகிக்கப்படுகின்றதொரு கம்பெனியாகும். மேலும், மேற்படி இரண்டு நிறுவனங்களும் தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்ல.

(i) LED ஒளிப் பலகையை கொள்வனவு செய்தல்

வருகை வழிகாட்டுதல்களின் 2.5 மற்றும் 2.6 பந்திகளுக்கு அமைவாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பெறுகைகள் மதிப்பிட்டு குழுவினால் கொள்வனவுகள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறாக செயற்படாமல் நிறுவனத்திற்கு ரூ.1,358,810 பெறுமதியான மேற்படி கொள்வனவை மேற்கொள்வதற்கு உதவி பொது முகாமையாளர் ( சந்தைப்படுத்தல்) தீர்மானித்துள்ளார்.

(ii) பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 9.8.1 (ஆ) பந்திக்கு அமைவாக, ரூ. 500,000 தொகையைவிட அதிகமானதொரு தொகைக்கு பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும்போது உடன்பாட்டுகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமெனினும் சபை இந்த கொள்வனவை அத்தகைய உடன்பாட்டிற்கு அமைவாக மேற்கொள்ளவில்லை

## 3. ஏனைய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள

### 3.1 வருமதிக் கணக்குகள்

(அ) லொத்தர் விற்பனையை அதிகரிப்பதற்காக பரிசாக வழங்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்களும் ஒரு மோட்டார் சைக்கிளும் காட்சிப்படுத்தல் வாகனங்களாக விற்பனை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. காட்சிப்படுத்தல் காலத்தில் மேற்படி வாகனங்களில் இரண்டு வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகியதுடன் அதன் காரணமாக ரூ.236,608 நட்டம் ஏற்பட்டுள்ளது. மேற்படி நட்டத்தை விற்பனை முகவர் களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதாக கணக்காய்வு க்கு அனுப்பப்பட்ட கதையின் பதில்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கிடைக்க வேண்டிய மீதியாக ரூ. 177,667 மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணத்தொகை ரூ.58,941 தொகை வருமதியாக வேண்டிய மீதியாக கணக்கு வைக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் அதில் ரூ. 12,566 பணத்தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) வொக்சோல் வீதியில் அமைந்துள்ள 234 ஆம் இலக்கம் கொண்ட கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தை சபை ஒருதலைப்பட்சமாக மீறியுள்ளதால் ரூ.723,780 வைப்புப் பணத்திலிருந்தும் அக்காலத்திற்கு செலுத்தவேண்டிய வாடகை ரூ. 4,252,440 பணத் தொகையிலிருந்தும் ஒரு பகுதியாக அமைந்த மொத்தம் ரூ. 4,976,230 பணத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு 15 வருடங்களாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் பயன்பாட்டுக்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடமொன்றிற்கு ஒரு வெளித் தரப்புக்கு வழங்கப்பட்டிருந்த ரூ.2,520,000 கட்டிட கூலி வைப்புத் தொகையொன்றை அறவீடு செய்வதற்கு இதற்கு 23 வருடங்களுக்கு முன்னர் சபையினால் தொடுக்கப்பட்ட வழக்குக்கு 2016 சனவரி 11 ஆம் தேதி தீர்ப்பு கிடைத்தது. இந்தத் தீர்ப்புக்கு அமைவாக பணத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், தீர்ப்பு வழங்கப்பட்டு சுமார் 3 வருட காலம் கடந்த நிலையிலும் அப் பணத்தொகையை மீள அறிவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை

(அ) பொது நடைமுறையின் கீழ் கடன் அடிப்படையில் லொத்தர் டிக்கெட்டுகளை விற்பனை செய்யும் போது அபிவிருத்தி லொத்தர் சபையின் உயர் மட்டத்திலான முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட கடன் தொகையை அடுத்த நாள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்வதற்கு இயலாதெனில் சம்பந்தப்பட்ட விற்பனை முகவருக்கு லொத்தர் டிக்கெட்டுகளை விற்பனை செய்தல் இடை நிறுத்தப்படும். எவ்வாறாயினும் 8 மாதம் முதல் 27 மாத காலம் வரையிலான காலப்பகுதியில் 5 விற்பனை முகவர்களிடம் ரூ. 2,660,39 பணத் தொகை நிலுவையாக உள்ளதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2018 ஆகஸ்ட் 28-ஆம் தேதி முதல் செப்டெம்பர் 27ஆம் திகதி வரை மொனராகலையில் நடைபெற்ற என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சிக்கு சபையினால் ரூ.3,325,821 பணத் தொகை செலவு செய்யப்பட்டு விற்பனை வருமானமாக ரூ.4,100,000 பணத்தொகை ஈட்டிக்கொள்ளப்பட்டதுடன் அப்பணத்தொகை சபையின் விற்பனை இலக்கில் 41 வீதமாகும். எவ்வாறாயினும் லொத்தர் சீட்டொன்றின் பொதுவான விற்பனை கிரயம் ரூ.3.50 ஆக இருப்பினும் மேற்படி கண்காட்சி திடலில் இக் கிரயம் ரூ.16.22 வரை உயர்வடைந்து இருந்ததுடன் அதன்மூலம் சபையின் பொதுவான விற்பனை செயற்பாடுகளின் மூலம் ஈட்டிக் கொள்ளப்படுகின்ற இலாபத்தை பார்க்கிலும் ரூ.2,607,000 அளவில் வீழ்ச்சி அடைந்திருந்தது.

**3.3 செயலிழந்துள்ள மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்கு சமாந்தரமாக நடத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு ஒரு மாவட்டத்திற்கு 10 கொடிக்கம்பங்கள் என்ற வகையில் 250 கொடிக் கம்பங்களை கொள்வனவு செய்வதற்கு சபை 2018-ஆம் ஆண்டில் ரூ.1,000,000 செலவினை மேற்கொண்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட கொடிக்கம்பங்கள் சபையின் வளவில் மிகவும் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவை கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் எவ்வித விளம்பரப் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 இலாபமற்ற கொடுக்கல் வாங்கல்கள**

---

பிரச்சார மூலோபாயமாக சபையின் அலுவலக வளவில் LED அறிவித்தல் பலகைகளை வடிவமைத்து பொருத்துவதற்காக தனியார் கம்பெனி ஒன்றினால் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் அதன் கலை வடிவமைப்பு பணிகள் மற்றும் உற்பத்தி பணிகளுக்கு ஏதுவான வழங்குனருக்கு ரூ.952,000 செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் மேற்படி கலை வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி பணிகள் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த அறிவித்தல் பலகைகள் பொருத்தப்பட்டிருந்த விதத்தை நோக்குகையில் உரியவாறு பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படும் வகையில் இல்லாதிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**3.4 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

(அ) லொத்தர் சீட்டிழுப்பு க்கு சபையினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணினி மென்பாக சேவை தனியார் கம்பனியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வருடாந்த மொத்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுக்காக ரூ. 6.5 மில்லியன் பெற்றுக் கொள்ளுகின்ற நான்கு நிறைவேற்று தரத்திலான உத்தியோகத்தர் கள் உள்ளிட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூ.9 மில்லியனை பெற்றுக்கொள்ளுகின்ற 08 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கியவாறு கணினி பிரிவொன்று சபையில் நிறுவப்பட்டிருந்தும் இந்தக் கணனி சார்ந்த பணிகள் அவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. 2009ஆம் ஆண்டு முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்த தனியார் கம்பெனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு ரூ.130,607,657 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) சபையின் நிதியை வெளி வாரியான ஆட்கள் பிடித்து வைத்தல்**

---

2019 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் ஒரு நாள் முதல் 187 நாள் வரையிலான காலப்பகுதியில் லொத்தர் வினியோகஸ்தர்களினால் சபைக்கு தீர்ப்பனவு செய்யப்படாத ரூ.1,638,032,144 பணத் தொகை காணப்பட்டது. அப்பணத்தொகையை உடனடியாக சபைக்கு அறவிட்டுக்கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.



டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# அபிவிருத்தி லொத்தர் சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு சார்ந்த பிரச்சினைகள் | முகாமைத்துவத்தின் நடவடிக்கைகள் |
|---|---|
| **1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**<br>------------------------------------------------<br>இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07<br>முறையே ரூபாய் 15,075,390 பணத்தொகை மற்றும் ரூ.29,515,418 பணத்தொகை இடர் கடன் கிடைப்பனவுகள் மற்றும் செலுத்தல்கள் காசுப் பாய்வுக் கூற்றின் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் புறம்பாக காட்டப்படாமல் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இதனை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**<br>------------------------------------------<br>(அ) 10 19 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த கணக்குகளுக்கு அமைவாக நடைமுறையிலிருந்த வேலைகள் மற்றும் முற்பணங்கள் என குறிப்பிடப்பட்டிருந்த முறையே ரூ. 1,583,595 மற்றும் ரூ.2,074,958 ஆகிய பணத்தொகை 2014ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இருந்து வந்த இடை நிறுத்தப்பட்ட நிர்மாண பணிகளுக்கு செலவு செய்யப்பட்ட பற்றாக்குறை நிலுவையாக இருந்தது. இந்த பெருமதி காண கணக்குகள் தேவையான திருத்தங்கள் செய்யப்படாமல் அப்பெரு மதி மேலும் 5 வருட காலத்திற்கு கணக்குகளில் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேலும் கைவிடப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு செலவு செய்யப்பட்ட மற்றுமொரு ரூ.1,325,805 பணத் தொகை ஆதனங்கள் இயந்திர நிலையங்கள் மற்றும் உபகரணங்கள் எனும் தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது டன் அதற்கு ஏதுவான பெறுமதி ஆதன கணக்கிலிருந்து அகற்றப்பட்டு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் இருந்தது. ஆகவே மேற்படி சொத்துக்களின் பெறுமதி அதன் பெறுமானத்தை விட அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கட்டிடக் கலைஞரினால் வழங்கப்படும் கட்டிடக்கலை வரைபடத்திற்கேற்ப நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. |
| (ஆ) சபைக்கு சொந்தமல்லாத காணியில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கு செலவிடப்பட்ட ரூ.492,392 பணத் தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது டன் அப்பணத்தொகை திஸ்ஸமகாராம பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த பணத்தொகை என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக ஆதனங்கள் எந்திர நிலையங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது நடைமுறையை சொத்துக்களின் பெறுமதி குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | இப்பிரசசினையை தீர்ப்பதற்காக சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் இற்றைவரை இது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. குழுவின் பரிந்துரைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (இ) மீளாய்வு ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த ஒரு பணிக்காக 2020 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்டிருந்த ரூ.1,421,842 பணத் தொகை மீனா இவ்வாண்டில் தொழிற்படும் நிலையிலிருந்த வேலைகள் மற்றும் கடன் கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2020 நிதிக்கூற்றுக்களில் இதனை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

| | |
|---|---|
| (ஈ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த இறுதி இருப்புக்களில் ரூ.2,853,172 பெறுமதியுடைய பயன்படுத்த இயலாத இருப்புகள் உள்ளடங்கி இருந்ததுடன் இதன் காரணமாக இறுதி இருப்பில் அதற்கு சமமான பெருமதி அதிகமாக காட்டப்பட்டிருந்தது | • 2020 ஆம் ஆண்டில் விற்பனை முகவர்களிடமிருந்து ரூ.29,388/- அறவிட்டுக்கொள்ளப்பட்டது.<br>• ரூ.957,296/- பதிவேடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>• ரூ.377,441/-தவறுடைய பொருட்களை அகற்றுவதற்கு அங்கீராத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (பணிப்பாளர் சபை பத்திரம் இலக்கம் 2020/10/1671)<br>• ரூ.மாதிரி பரிசோதனைக்கு ரூ.5,480/-ஒதுக்கப்பட்டுள்ளது.<br>• முச்சக்கர வண்டியை ரூ.575,000/-இற்கு மதிப்பீடு செய்து அகற்றப்பட்டுள்ளதுடன் அப்பணத்தொகையை சனாதிபதி நிதியத்தில் வைப்பிலிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>• ரூ.17,250/-பணத்தொகை எதிர்வரும காலத்தில் பயன்படுத்திக்கொள்ளப்படும்<br>• ரூ.921,699/-தொகை எதிர்வரும் காலததில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (உ) விளம்பர வண்டியொன்றை அமைப்பதற்காக தொடர்ந்தும் செலுத்த வேண்டியிருந்த ரூ.1,515,300 பணத் தொகை கணக்கு வைக்கப்படாமல் இருந்ததுடன் இதற்கமைவாக சாதனங்கள் இயந்திர நிலையங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவுகளுக்கான கணக்குகளில் அதற்கு சமமானதொரு பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2020 நிதிக்கூற்றுக்களில் இதனை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **1.2.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை**<br>----------------------------------------------------------------<br>நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள முன்னைய வருடத்தில் லொத்தர் சீட்டுகளை அச்சிடுதல் தொடர்பான ரூ.732,951 செலவினக் கணக்கு மீதி தொடர்பாக உறுதிப்படுத்தக் கொள்ளக்கூடிய சான்றுகள் இல்லாத காரணத்தினால் இந்த உருப்படி திருப்தி அடையக் கூடிய வகையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அத்தாட்சிப்படுத்திக் கொள்வதற்கு இயலாதிருந்தது.<br>இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக என்னால் கணக்காய்வு கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்தல் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதுமானதாகவும் பொருத்தமானதாகும் இருக்கின்றது என நான் நம்புகின்றேன். | சம்பந்தப்பட்ட கோப்பினை அரச கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய** | |

| அறிக்கை | | | |
|---|---|---|---|
| சட்டங்கள் விதிமுறைகள் / பணிப்புரைகளுக்கான தொடர்பு<br><br>(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | எட்டாம் பந்தியின் 4.1 பிரிவு | கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்கு உரித்து இல்லை என நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்வு ஆண்டில் சபையின் கள உத்தியோகத்தர்களுக்கு ரூ. 1,122,318/- மேலதிக நேர கொடுப்பனவாக செலுத்தப்பட்டு இருந்தது.<br><br>தாபனக் கோடைக்கு அமைவாக 1/20 கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு பதவி யணி உத்தியோகத்தர்கள் கட்டாயமாக நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் உத்தியோகபூர்வ கடமைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தும் சபையின் லீவு நாட்களில் பதவியினை உத்தியோகத்தர்கள் பணியாற்றிய மணித்தியாலங்களின் படி அந்த உத்தியோகத்தர்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு ஒண்டரை மணித்தியாலம் எனும் விகிதத்துக்கு அமைவாக மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்த உத்தியோகத்தர்கள் அந்நாட்களில் நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்பில் கலந்துகொண்டு அதற்காக செலுத்தப்படும் கொடுப்பனவை யும் பெற்றுக் கொண்டிருந்தனர். | அமைச்சிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தை எதிர்பார்த்துள்ளோம். 2020 செப்டெம்பர் 01 ஆம் திகதி முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. |
| ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணங்கள்<br><br>----------------------- | | | இவ்விடயம் 2020 இல் திருத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (i) 272 (3) ஆம் நிதிப் பிரமாணம | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுறுதி சீட்டுகளும் அத்தகைய செலவுறுதி சீட்டுக்களுக்கு ஏதுவான மாதம் நிறைவடைந்து ஆறு கிழமைகளுக்கு விஞ்ஞாத காலத்திற்குள் கணக்காய்வாளர் சமர்ப்பித்தல் வேண்டுமெனினும் சபை மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்திற்கான செலவுறுதிச் சீட்டுக்களை சமர்ப்பிக்கும் போது ஒரு மாதம் முதல் 7 மாதங்கள் வரையிலான காலதாமதம் இடம்பெற்றிருந்தது. | |
| (i) 15 ஜூலை 14ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 371(2) (ஆ) ஆம் இலக்க நிதிப் பிரமாணம | ஒரு தடவையில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய இடைக்கால முற்பணத்தொகை ரூ.100,000.00 ஆக இருப்பினும் மீனாய்வாண்டில் இருபது தடவைகளில் அத்தகைய எல்லையை கடந்து ரூ. 3,481,827.00 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.<br>.<br><br>இடைக்கால முற்பணம் பதவி அணி தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படவேண்டுமாயினும் 2019 ஆம் ஆண்டில் பதவியணி தரத்தை சாராத உத்தியோகத்தர்களுக்கு ரூ.10,727,741 பெருமதியான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br>.<br><br>ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குரிய இடைக்கால முற் பணத்தை செலுத்தும்போது சம்பந்தப்பட்ட பணிக்கான மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டில் 219 சந்தர்ப்பங்களில் ரூ.1,680,806 நிதி சேமிப்பு பதிவாகியிருந்தது.<br>. | இந்நிலையை திருத்தியமைப்பதற்காக 2016.06.26 ஆம் திகதி ஒரு புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது.<br>நடைமுறை பிரச்சினைகள் காரணமாக இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இயலாதென அபிவிருத்தி லொத்தர் சபை அரச கணக்காய்வுக்கு அறிவித்துள்ளது. |
| (i) 371(2) (இ) ஆம் நிதிப் பிரமாணம் | திட்டவட்டமான பணிக்கு கிடைத்த முற்பணம் சம்பந்தப்பட்ட விடயத்தின் பணிகள் நிறைவுற்ற உடனேயே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமெனினும் 2019 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் 12 சந்தர்ப்பங்களில் ரூ.650,500 முற்பணம் 18 நாட்கள் முதல் 47 நாட்கள் வரையிலான காலம் தாமதமாகிய பின்னர் செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. | இந்நிலையை திருத்தியமைப்பதற்காக 2016.06.26 ஆம் திகதி ஒரு புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. |
| | | மோட்டார் வண்டியையும் 44 |

| | | |
|---|---|---|
| திறைசேறி சுற்றறிக்கை<br>(i) 18 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு நிதி மற்றும் ஊடக அமைச்சின் செயலாளரின் 4/2008 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முடியெல்லாம் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டுதல்கள .<br><br>1.1.1. ஆம் பந்தி | <br><br><br><br><br><br><br><br><br>சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் ரூ.8,958,763 பெறுமதியுடைய 44 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டில் ரூ.7,882,371 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த Hyundai ரக மோட்டார் வாகனம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை பெற்றுக் கொண்டிருக்கவில்லை | மோட்டார் சைக்கிள்களையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கமைவாக அவற்றை நிலையான சொத்துக்களின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 1.1.3 ஆம் பந்தி | ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகனங்கள் மூன்று வகுதிகளுக்கு வகைப்படுத்த வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் அவை மோட்டார் திணைக்களத்தின் மோட்டார் பரிசோதகர் ஒருவரும் சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரும் உள்ளடங்கும் வகையில் நிறுவனத் தலைவரினால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று பேரைக் கொண்ட குழுவினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறு செயற்படாமல் மேற்படி வாகனங்கள் மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக அடுத்த மதிப்பீட்டின் போது திருத்தப்படும் |
| 2015 ஜூலை 10 ஆம் திகதிய 02/2005 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்று நிருபத்தின் 9 ஆம் பந்தியின் (அ)பிரிவு | ஏற்பாடுகளுக்கு அமைவாக வாகனம் ஒன்றை அகற்றும் செயன்முறை அவ் வாகனத்தின் உரிமை நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்காவிடின் அவ் வாகனம் அவ்வாறு நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டில் விற்பனை முகவர் ஒருவருக்கு வழங்குவதற்கு ரூ.411,500 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டி பதிவு செய்யப்படாமல் 2017 ஜூலை மாதம் வரையில் அவரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்து பின்னர் அது சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | 2020.08.26 ஆம் திகதி முச்சக்கரவண்டி அபிவிருதத்தி லொத்தர சபையின் பெயரில் பதிவுசெய்யப்பட்டதுடன் அது 2016.08.28 ஆம் திகதி ரூ.575,000/-தொகைக்கு அகற்றப்பட்டது. |

| | |
|---|---|
| அது இற்றைவரை பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் 2020 ஜூன் 29ஆம் திகதி அதனை அகற்றுவதற்கான கேட்பு விலை கோரப்பட்டிருந்தது. | |
| (அ) பெறுகைகள் சார்ந்த தாமதங்கள்.<br>-------------------------------------------------------<br>2018 ஆம் ஆண்டில் ரூபாய் 5,565,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பின்புறம் உடற்பகுதியற்ற இரண்டு சக்கரங்களைக் கொண்ட உசநற உயடி வாகனம் பிரச்சார வாகனமாக பயன்படுத்தப்படுவதற்கு 2018 அக்டோபர் மாதம் 18ஆம் தேதி ரு-ளுசஊ நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2020 ஜூன் மாதம் 30ஆம் திகதியாகின்றபோது ஒரு வருடமும் எட்டு மாத காலமும் கடந்து இருந்தபோதும் அதுவரை அந்த லொறி வண்டிக்கான உடற்பகுதி சட்டத்தை அமைத்தல் , வெளி மேலுறையை அமைத்தல் பின் கதவுகளை பொறுத்துதல் என்ன விடயங்கள் மாத்திரமே செய்யப்பட்டுள்ளன. விற்பனை மேம்படுத்தல் வண்டி ஒன்றை கொள்வனவு செய்வதற்கு 10.2 மில்லியன் பணத் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதும் லொத்தர் டிக்கட்டுகளை ஏற்றிச் செல்வதற்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்றை திடீரென விற்பனை விளம்பர வண்டியாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் தொடர்பான வழிகாட்டல் களின் 2.6 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளை வருத்திக் கொள்ளாமல் விவரக்குறிப்பீடுகளை தயாரித்து கேட்பு விலை கோரப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்தச்சட்டத்தின் 6 (1) பிரிவில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு மாறாக வாகனத்தின் அளவும் மாற்றப்பட்டிருந்தது. இதற்கமைவாக பணிக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் ஒருவருட காலத்தில 8 மாத காலம் காலாவதியாகி இருத்தல் சொத்துக்கள் மற்றும் அதன் உட்கூறுகளின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் வாகனத்தை பதிவு செய்தல் தொடர்பான இடர்வரு நிலை மட்டுமே வினைத்திறன் பாதுகாப்பின் செல்லுபடி காலம் கடந்துள்ள மை ஆகிய காரணங்களின் விளைவாக ரூ.12,670,000 செலவினை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள மேற்படி தொழில் படுத்தல் செயற்பாடுகளை கணக்கு கூற்றுகளின் உரிய கணக்குகளின் வாயிலாக கண்டறிய இயலாமை சிக்கல் மிக்கதென கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டுள்ளது. | வீடியோ திரையை அமைக்கும் பணி நிறைவுசெய்யப்பட்டு வருவதுடன் இது 2020 நவம்பர் மாதத்தில் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) லொத்தர் சீடடுக்களை அச்சிடுவதற்கான அச்சகத்தை தெரிவுசெய்தல்<br>---------------------------------------------------------------------------------------------------------<br>---<br>(i) 2013 சனவரி 02 ஆம் திகதிய 01/2013 இலக்கம் கொண்ட அத்துடன் 2017 அக்டோபர் மாதம் 09 ஆம் திகதிய 04 ஆம் இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் 2006 அரச பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 7,6,7.7.7.1 (அ), 795(இ), 7,8,9 (ஆ) (iii), 8.5.1 (அ) மற்றும் (ஆ) ஆகிய வழிகாட்டுதல்கள் மற்றும் 2008 டிசெம்பர் 17 ஆம் திகதிய අප/145/306/2356/08TRB இலக்கமுடைய அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவுசெய்ய வேண்டும் எனினும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கு அச்சகங்களை தெரிவு செய்யும்போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறான பல சந்தர்ப்பங்களில் பின்வருமாறு.<br><br>- அரச நிதி திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் பெறுகைகள் அளவுகோல்கள் உள்ளிட்ட பெறுகை ஆவணங்களை தயாரித்தல் காரணமாக சபைக்கு அனுகூலமாக அமையக்கூடிய அச்சக கம்பெனிகள் பெறுகைகள் செயன்முறையிலிருந்து விடுபடுதல். | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு (2020/2021) அச்சகத்தை தெரிவுசெயவதற்கான அளவுகோல்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அடுத்த கேள்விப்த்திர நடவடிக்கை முதல் அதனை திருத்தியமைப்பதற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | |
|---|---|
| கேட்பு விலையை மதிப்பிடுவதற்காக அமைச்சின தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு இசைந்தொழுகாத நிறுவனங்களை தெரிவு செய்தல்.<br><br>- பதில் அளிக்காமல் இருந்த கேட்பு விலை முன் வைத்தவர்களை தெரிவு செய்தல்.<br><br>(i) மேல்முறையீட்டுக்கு போதியளவு காலத்தை வழங்காமலும் மேன்முறையீடு களை நிராகரித்து பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 8.5, 8.5.1(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகளை புறக்கணித்து அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானத்தை விலை கேட்பவர்களுக்கு அறிவித்தல்<br>(ii) சபையின் தலைவர் அமைச்சின் பெறுகைகள் குழுவின் அங்கத்தவராக இருப்பதுடன் பிரதி பொது முகாமையாளர் ( நிதி) அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராவார். இந்த விடயத்துக்கு பொறுப்பான பிரதி பொது முகாமையாளர் ( நிதி) மற்றும் உதவி பொது முகாமையாளர் ( நிதி) அச்சுப் பிழைகள் தொடர்பாக அறிந்திருந்தும் அச்சு நடவடிக்கையில் எவ்வித தவறும் இல்லை எனவும் இரண்டு வழங்குனர்கள் தொடர்பாகவும் குழுவுக்கு திருப்தி அடைய முடியும் என்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு தமது அறிக்கையில் அறிக்கையிடுதல். | |
| 2018 மார்ச் மாதம் 25ஆம் திகதி நடாத்தப்பட்ட கோடிபதி சனிதா லொத்தரின் 271 ஆவது சீட்டிழுப்புக்கு ஏதுவான லொத்தர் சீட்டுகளில் தவறான பரிசு முறையொன்றை அச்சிட்டதன் காரணமாக சபை ரூபா 320,000 மேலதிக பரிசு ஒன்றை வழங்குதல் ஒப்பந்தத்திற்கு அமைவாக சம்பந்தப்பட்ட அர்ச்சகர் கம்பெனியிடமிருந்து ரூ.320,000 தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு தவறியமை மற்றும் தவறான தரவுகளை அச்சிட்டதன் காரணமாக ரூ.500,000 பணத் தொகையை அறிவிட்டுக் கொள்வதற்கு இயலாமல் போகுதல்.<br>மேன்முறையீடுகளை வரவழைப்பதற்கு வெற்றி பெறாத விலை கேட்பவர்களுக்கு அறிவிக்கும் கடிதங்கள் அனுப்பிய அமைச்சின் பெறுகைகள் குழுவின் தலைவராகிய தரப்பு மேன்முறையீட்டு சபையாக பணியாற்றிய ஒன்றிணைந்த குழுவின் தலைவராக பணியாற்றியமை மற்றும் அக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக ஒப்பந்தத்தை மீள வழங்குவதை அங்கீகரித்தமை. இவ்விடயங்கள் காரணமாக கணக்காய்வின் போது பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மை சந்தேகத்துக்கிடமாக தோன்றியது. | ரூ.320,000/-தொகை நட்டம் ஏற்படவில்லையென அபிவிருத்தி லொததர் சபை அரச கணக்காய்விற்கு அறிவித்துள்ளது. எவ்வறாயினும், லொத்தர் சீட்டில் தவறொன்று காணப்பட்டது. சந்தைக்கு விடுவிப்பதற்கு முன்னர் லொத்தர் சீட்டில் வித்தியாசத்தை ஆராய்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபையினால் தரப் பரிசோதனை குழுவொன்று நியமிக்கப்பட்டது. |
| (இ) பரிசுகளை கொள்வனவு செய்தல்<br>------------------------------------------------------<br><br>(i) சுப்பர் போல் விசேட லொத்தர் பரிசாக வழங்கப்படவிருந்த 20 செல்லிடத் தொலைபேசி களுக்கு ரூ.672,860 பணத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது டன் இந்து கொள்வனவு பெறுகை செயன்முறைக்கு மாறாக கொள்ளப்பட்டிருந்தது. | போட்டி கேட்பு விலை முறையை பயன்படுத்தி பெறுகையை மேற்கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) பெறுகை வழிகாட்டல்களின் 8.8.1 பந்தியின் (ஆ) பிரிவுக்கு அமைவாக ரூ.500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முறையான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமாயினும் அதகோடிபதி விஷேட லொத்தர் சீட்டிழுப்புக்கு ரூ.1,699,500 பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக அவ்வாறானதொரு இணக்கம் ஏற்படுத்தப்படவில்லை.<br>. | அடுத்த கேள்விப்பத்திரம் முதல் இதனை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | |
| (ஈ) குடிநீர் போத்தல் கொள்வனவு (ரூ.1,911,663)<br>------------------------------------------------------------------------<br><br>உரிய பெருமை செயல் முறையை பின்பற்றாமல் சபையானது குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்வதற்கு 2016 ஆம் ஆண்டில் ஒரு நிறுவனத்தை தெரிவு செய்து கொண்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு திகதி வரையில் அந் நிறுவனத்திலிருந்து மாத்திரம் குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்திருந்தது. | .<br>தண்ணீர் போத்தல்களை வழங்குவதற்கு வழங்குனர்களை வருடாந்தம் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (உ) உடனடி லொத்தர் விற்பனையை மேம்படுத்துவதற்கு டி-ஷர்ட் களை கொள்வனவு செய்தல்<br>------------------------------------------------------------------------------------------------------<br>களஞ்சியசாலையில் போதிய அளவு இருப்பு இருந்தபோதிலும் மீண்டும் கொள்வனவு செய்தல் உரிய சந்தைப்படுத்தல் திட்டமொன்றுக்கு அமைவாக உடனடி லொத்தர்களை நடத்தாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட விளம்பர பொருட்களுக்கு உடனடி லொத்தர்களை அச்சிட்டு விநியோகிக்காமலிருத்தல் போன்ற காரணங்களின் விளைவாக லொத்தர் விற்பனை மேம்படுத்தலுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூ.9,075,040 பெறுமதியான 17,452 டீ சர்ட்கள் வெறுமனே வைக்கப்பட்டிருந்தன. | 2020 ஆண்டில் உடனடி லொத்தர் சீட்டுக்களை சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ப்பட்டுள்ளது. |
| (ஊ) தீயணைப்பு கருவித் தொகுதியொன்றை கொள்வனவு செய்தல்<br>-------------------------------------------------------------------------------------------------2019 ஆம் ஆண்டில் சபை ரூ.2,357,000 பணத் தொகையை செலவிட்டு தீயணைப்பு கருவி தொகுதியொன்றை நிறுவியுள்ளதுடன் அதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் கேட்பு விலைகளை கோரியுள்ளது. இதற்கான வழங்குநரை தெரிவு செய்து கொள்ளும் பெறுகை செயன்முறைக்கு சபையின் பெறுகை பிரிவின் நேரடி தலையீடு இல்லாத இருந்ததுடன் வழங்குநரை தெரிவு செய்து கொண்ட பின்னர் தீயணைக்கு சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள எந்த ஒரு நிறுவனத்திடமிருந்தும் கேட்பு விலை கோரப்பட்டதற்கான எவ்வித சான்றுகளும் இல்லாத துடன் விலை கேட்போர் இரண்டு பேரில் ஒருவர் இதற்கு தெரிவுசெய்யப்பட்ட கம்பெனியினால் நிர்வகிக்கப்படுகின்றதொரு கம்பெனியாகும். மேலும், மேற்படி இரண்டு நிறுவனங்களும் தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்ல.<br>. | தெரிசெய்யப்பட்ட வழங்குனர் தீயணைக்கும் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். |
| (i) LED ஒளிப் பலகையை கொள்வனவு செய்தல்<br><br>வருகை வழிகாட்டுதல்களின் 2.5 மற்றும் 2.6 பந்திகளுக்கு அமைவாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பெறுகைகள் மதிப்பிட்டு குழுவினால் கொள்வனவுகள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் அவ்வாறாக செயற்படாமல் நிறுவனத்திற்கு ரூ.1,358,810 பெறுமதியான மேற்படி கொள்வனவை மேற்கொள்வதற்கு உதவி பொது முகாமையாளர் ( சந்தைப்படுத்தல்) தீர்மானித்துள்ளார | |

| | |
|---|---|
| (ii) பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 9.8.1 (ஆ) பந்திக்கு அமைவாக, ரூ. 500,000 தொகையைவிட அதிகமானதொரு தொகைக்கு பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும்போது உடன்பாட்டுகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமெனினும் சபை இந்த கொள்வனவை அத்தகைய உடன்பாட்டிற்கு அமைவாக மேற்கொள்ளவில்லை | |
| **3. ஏனைய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள**<br>--------------------------------------------------------------------------------------------<br>**1.1 வருமதிக் கணக்குகள**<br><br>(a) (அ) லொத்தர் விற்பனையை அதிகரிப்பதற்காக பரிசாக வழங்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்களும் ஒரு மோட்டார் சைக்கிளும் காட்சிப்படுத்தல் வாகனங்களாக விற்பனை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. காட்சிப்படுத்தல் காலத்தில் மேற்படி வாகனங்களில் இரண்டு வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகியதுடன் அதன் காரணமாக ரூ.236,608 நட்டம் ஏற்பட்டுள்ளது. மேற்படி நட்டத்தை விற்பனை முகவர் களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதாக கணக்காய்வு க்கு அனுப்பப்பட்ட கதையின் பதில்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கிடைக்க வேண்டிய மீதியாக ரூ. 177,667 மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணத்தொகை ரூ.58,941 தொகை வருமதியாக வேண்டிய மீதியாக கணக்கு வைக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் அதில் ரூ. 12,566 பணத்தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது | விற்பனை முகவர்களிடமிருந்து அப்பணத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) வொக்சோல் வீதியில் அமைந்துள்ள 234 ஆம் இலக்கம் கொண்ட கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தை சபை ஒருதலைப்பட்சமாக மீறியுள்ளதால் ரூ.723,780 வைப்புப் பணத்திலிருந்தும் அக்காலத்திற்கு செலுத்தவேண்டிய வாடகை ரூ. 4,252,440 பணத் தொகையிலிருந்தும் ஒரு பகுதியாக அமைந்த மொத்தம் ரூ. 4,976,230 பணத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு 15 வருடங்களாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணம் 105 இற்கு அமைவாக நிதி அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழு அதன் பரிந்துரைகளை நிதி அமைச்சிற்கு சமர்ப்பித்து அதன் பதிலுக்காக காததிருக்கின்றது. |
| (இ) சபையின் பயன்பாட்டுக்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடமொன்றிற்கு ஒரு வெளித் தரப்புக்கு வழங்கப்பட்டிருந்த ரூ.2,520,000 கட்டிட கூலி வைப்புத் தொகையொன்றை அறவீடு செய்வதற்கு இதற்கு 23 வருடங்களுக்கு முன்னர் சபையினால் தொடுக்கப்பட்ட வழக்குக்கு 2016 சனவரி 11 ஆம் தேதி தீர்ப்பு கிடைத்தது. இந்தத் தீர்ப்புக்கு அமைவாக பணத்தை அறவிட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், தீர்ப்பு வழங்கப்பட்டு சுமார் 3 வருட காலம் கடந்த நிலையிலும் அப் பணத்தொகையை மீள அறிவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>. | சட்டமா அதிபர் திணைக்களம் இப்பணத்தொகையை மீள அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 3.2 **3.2 தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை**<br>--------------------------------------------------------------<br><br>(அ) பொது நடைமுறையின் கீழ் கடன் அடிப்படையில் லொத்தர் டிக்கெட்டுகளை விற்பனை செய்யும் போது அபிவிருத்தி லொத்தர் சபையின் உயர் மட்டத்திலான முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட கடன் தொகையை அடுத்த நாள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்வதற்கு இயலாதெனில் சம்பந்தப்பட்ட விற்பனை முகவருக்கு லொத்தர் டிக்கெட்டுகளை விற்பனை செய்தல் இடை நிறுத்தப்படும். எவ்வாறாயினும் 8 மாதம் முதல் 27 மாத காலம் | சம்பந்தப்பட்ட விநியோகத்தர்களிடமிருந்து வங்கி உத்தரவாதங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நிலுவைத் |

| | |
|---|---|
| வரையிலான காலப்பகுதியில் 5 விற்பனை முகவர்களிடம் ரூ. 2,660,39 பணத் தொகை நிலுவையாக உள்ளதென அவதானிக்கப்பட்டது. | தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| ஆ) 2018 ஆகஸ்ட் 28-ஆம் தேதி முதல் செப்டெம்பர் 27ஆம் திகதி வரை மொனராகலையில் நடைபெற்ற என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சிக்கு சபையினால் ரூ.3,325,821 பணத் தொகை செலவு செய்யப்பட்டு விற்பனை வருமானமாக ரூ.4,100,000 பணத்தொகை ஈட்டிக்கொள்ளப்பட்டதுடன் அப்பணத்தொகை சபையின் விற்பனை இலக்கில் 41 வீதமாகும். எவ்வாறாயினும் லொத்தர் சீட்டொன்றின் பொதுவான விற்பனை கிரயம் ரூ.3.50 ஆக இருப்பினும் மேற்படி கண்காட்சி திடலில் இக் கிரயம் ரூ.16.22 வரை உயர்வடைந்து இருந்ததுடன் அதன்மூலம் சபையின் பொதுவான விற்பனை செயற்பாடுகளின் மூலம் ஈட்டிக் கொள்ளப்படுகின்ற இலாபத்தை பார்க்கிலும் ரூ.2,607,000 அளவில் வீழ்ச்சி அடைந்திருந்தது. | அபிவிருத்தி லொத்தர் சபை இந்த வைபத்தை விளம்பர ஊக்குவிப்பு செயற்பாடாகவும் வர்த்தக குறியீட்டை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமாகவும் மாத்திரம் கருதியது. அபிவிருத்தி லொததர் சபை அரச அபிவிருததி நிகழ்ச்சித்திட்டங்களை பின்பற்றுதல்/ பிரதிநிதித்துவப்படுத்துதல் வேண்டும். |
| **3.3 செயலிழந்துள்ள மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**<br>----------------------------------------------------------------------------------------------------<br>விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்கு சமாந்தரமாக நடத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு ஒரு மாவட்டத்திற்கு 10 கொடிக்கம்பங்கள் என்ற வகையில் 250 கொடிக் கம்பங்களை கொள்வனவு செய்வதற்கு சபை 2018-ஆம் ஆண்டில் ரூ.1,000,000 செலவினை மேற்கொண்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட கொடிக்கம்பங்கள் சபையின் வளவில் மிகவும் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவை கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் எவ்வித விளம்பரப் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கொடிக் கம்பங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்போது அவை உரியவாறு திரட்டி வைப்பதில் சிரமங்கள் உள்ளன. |
| 3.2 **3.4 இலாபமற்ற கொடுக்கல் வாங்கல்கள**<br>--------------------------------------------------------------------<br>பிரச்சார மூலோபாயமாக சபையின் அலுவலக வளவில் LED அறிவித்தல் பலகைகளை வடிவமைத்து பொருத்துவதற்காக தனியார் கம்பெனி ஒன்றினால் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் அதன் கலை வடிவமைப்பு பணிகள் மற்றும் உற்பத்தி பணிகளுக்கு ஏதுவான வழங்குனருக்கு ரூ.952,000 செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் மேற்படி கலை வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி பணிகள் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த அறிவித்தல் பலகைகள் பொருத்தப்பட்டிருந்த விதத்தை நோக்குகையில் உரியவாறு பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்படும் வகையில் இல்லாதிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. | இணங்கிக்கொள்ளப்பட்ட சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| 3.2 **3.4 முகாமைத்துவ செயற்பாடுகள்**<br>--------------------------------------------------<br>(அ) லொத்தர் சீட்டிழுப்பு க்கு சபையினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணினி மென்பாக சேவை தனியார் கம்பனியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வருடாந்த மொத்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுக்காக ரூ. 6.5 மில்லியன் பெற்றுக் கொள்ளுகின்ற நான்கு நிறைவேற்று தரத்திலான உத்தியோகத்தர் கள் உள்ளிட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூ.9 மில்லியனை பெற்றுக்கொள்ளுகின்ற 08 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கியவாறு கணினி பிரிவொன்று சபையில் நிறுவப்பட்டிருந்தும் இந்தக் கணனி சார்ந்த பணிகள் அவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. 2009ஆம் | லொத்தர் முகாமைத்துவ தொகுதியை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், முகாமைத்துவத்தினால் |

| | |
|---|---|
| ஆண்டு முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இந்த தனியார் கம்பெனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு ரூ.130,607,657 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | விடயப் பரப்பு மாற்றப்பட்டுள்ளது. ஆகவே, மீண்டும் கேள்விப்பத்திரம் கோரப்படுதல் வேண்டும். |
| **ஆ) சபையின் நிதியை வெளி வாரியான ஆட்கள் பிடித்து வைத்தல்**<br>------------------------------------------------------------------------------------------------------------<br>2019 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் ஒரு நாள் முதல் 187 நாள் வரையிலான காலப்பகுதியில் லொத்தர் வினியோகஸ்தர்களினால் சபைக்கு தீர்ப்பனவு செய்யப்படாத ரூ.1,638,032?144 பணத் தொகை காணப்பட்டது. அப்பணத்தொகையை உடனடியாக சபைக்கு அறவிட்டுக்கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | விநியோகத்தர்களின் கணக்குகளை முடக்குவதற்கும் விநியோகத்தர்களிடமிருந்து 25% தரகுப் பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

# அபிவிருத்தி லொததர் சபை

| டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான | குறிப்புகள் | 2019 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|---|
| **வருவாய்** | 01 | **1 7,065,414,012** | 15,854,856,246 |
| லொத்தர் சீட்டுகளுக்கான கிரயம் | 02 | **4 60,097,151** | 402,322,679 |
| பரிசுகளுக்கான செலவினம் | 03 | **8 ,903,494,383** | 8,296,413,110 |
| சீட்டிழுப்பு கிரயம் | 04 | **5 84,074,507** | 575,478,468 |
| **மொத்த இலாபம்** | | **7 ,117,747,971** | 6,580,641,989 |
| ஏனைய வருமானம் | 05 | **193,820,035** | 201,525,679 |
| விநியோக கிரயம் | 06 | **4 ,219,036,579** | 3,950,410,156 |
| நிர்வாக செலவுகள் | 07 | **5 41,799,568** | 463,619,071 |
| **தொழிற்படுத்தல் செலவுகளுக்கு பினனரான மிகை** | | **2 ,550,731,860** | 2,368,138,441 |
| நிதிக் கிரயம் | 08 | **4 38,396** | 317,927 |
| பரிசுகளை செலுததித் தீர்ததல் | | **3 46,837,460** | 367,426,928 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **2 ,897,130,924** | 2,735,247,442 |
| வருமான வரி | 09 | **235,073,385** | 553,166,576 |
| **வருமான வரிக்கு பின்னரான இலாபம** | | **2 ,662,057,539** | 2,182,080,866 |
| **பிற விரிவான வருமானம்** | | | |
| வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் ஆயுட்கால இலாபம்∴ நட்டம் | 17.1 | **6 ,735,128** | 5,523,090 |
| **ஆண்டுகான மொத்த விரிவான வருமானம்** | 10 | **2,668,792,667** | 2,187,603,956 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

W.A.V.C. **சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

**ஜகத் பீ. விஜேவீர**
தலைவர்/பிரதம நிறைவேறறு உத்தியோகத்தர்

**ஜெனட் ஜயவர்தன**
பணிப்பாளர்

# அபிவிருத்தி லொத்தர் சபை
# டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைக் கூற்று

| டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|---|
| **சொதுக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொததுக்கள்** | 11 | | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள்,உபகரணங்கள் | | **1,221,373,015** | 715,038,048 |
| நடைமுறையிலுள்ள முலதன வேலைகள் | | **14,665,947** | 1,583,595 |
| **அருவச் சொத்து** | 11 | **9,549,182** | 2,459,791 |
| | | **1,245,588,144** | 719,081,433 |
| பணியாளர் நலன்சார்ந்த சொத்துக்கள் | 17 | **7,038,067** | 2,271,294 |
| **மொத்த நடைமுறையல்லாச சொத்துக்கள்** | | **1,252,626,211** | 721,352,727 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| சரக்குத் தொக்குகள் | 13 | **51,026,204** | 80,340,650 |
| வணிக கடன்பெற்றோர் மற்றும் பிற வருமதிகள் | 14 | **126,012,880** | 169,375,594 |
| முற்கொடுப்பனவு மற்றும் வைப்புகள் | 15 | **5,212,271** | 11,633,780 |
| நிலையான வைப்புகள் | 12 | **1,451,307,572** | 1,218,142,035 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | **795,666,048** | 461,682,393 |
| மொத்த நடைமுறை சொததுக்கள் | | **2,429,224,975** | 1,941,174,453 |
| **மொத்த சொததுக்கள்** | | **3,681,851,186** | 2,662,527,179 |
| **உரிமைபபங்குகள் மற்றும் பொறுப்புகள்** | | | |
| **பங்களிப்பு மூலதனம்** | | | |
| சனாதிபதி நிதியம் | | **2,200,000** | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | | **2,200,000** | 2,200,000 |
| பரிசு ஒதுக்கக் கணக்கு | | **1,103,197,285** | 971,045,950 |
| செலுத்தப்படவேண்டிய சனாதிபதி நிதியம் | | **477,792,667** | 237,466,297 |
| மீள்மதிப்பீடு மிகை | | **575,515,293** | - |
| **மொத்த உரிமைப் பங்கு** | | **2,160,905,245** | 1,212,912,247 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தப்பட வேண்டிய முகவர் மற்றும் விநியோகத்தர் வைப்புகள் | 18 | **36,110,381** | 35,395,381 |
| மொத்த நடைமுறையல்லா பொறுபபுகள் | | **36,110,381** | 35,395,381 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வணிக மற்றும் ஏனைய சென்மதிகள் | 19 | **563,493,496** | 671,110,675 |
| சென்மதியான பரிசுகள் | 20 | **760,794,203** | 648,835,116 |
| சென்மதியான கடன் வவுச்சார்கள் | | **160,547,860** | 94,273,760 |
| மொதத நடைமுறை பொறுப்புகள் | | **1,484,835,560** | 1,414,219,551 |
| **மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்** | | **3,681,851,186** | 2,662,527,179 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

W.A.V.C. **சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

**ஜகத் பீ. விஜேவீர**
தலைவர்/பிரதம நிறைவேறறு உத்தியோகத்தர்

**ஜெனட் ஜயவர்தன**
பணிப்பாளர்

# அபிவிருத்தி லொத்தர் சபை டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் காசுப் பாய்வுக் கூற்று

| டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | 2019 Rs. | 2018 Rs. |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து விளைந்த காசுப் பாய்வு** | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | **2 ,897,130,924** | 2 ,735,247,442 |
| **சீராக்கங்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | | **80,242,809** | 52,893,461 |
| பரிசு ஒதுக்கம் | | **132,151,335** | 161,016,492 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | **8,395,852** | 8,466,827 |
| செலுத்தப்பட்ட பணிகொடைகள் | | **(1,031,009)** | (362,160) |
| வட்டி வருமானம் | | **(173,307,868)** | (184,691,737) |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் இலாபம் | | **-** | (5,486,000) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | **(27,382,719)** | (5,641,660) |
| செலுத்தப்பட்ட முன்கூட்டிய வருமான வரி | | **(190,444,919)** | (724,500,149) |
| செலுத்தப்பட்ட சனாதிபதி நிதியம் | | **(2,428,466,297)** | (2,058,000,000) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படுத்தல் இலாபம்** | | **297,288,108** | (21,057,483) |
| **தொழிற்பாடு சொத்துக்களின் அதிகரிப்பு / குறைவு** | | | |
| சரக்குத் தொக்குகளின் அதிகரிப்பு / குறைவு | | **29,314,446** | (21,985,247) |
| கடன்பெறுனர்களின் அதிகரிப்பு / குறைவு | | **43,362,714** | 25,980,874 |
| வைப்பு மற்றும் முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு / குறைவு | | **6 ,421,509** | (5,160,049) |
| **தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு / குறைவு** | | | |
| கடன் தருநர்களின் அதிகரிப்பு / குறைவு | | **(140,214,431)** | 71,753,041 |
| சென்மதியான பரிசுகளின் அதிகரிப்பு / குறைவு | | **111,959,087** | (49,653,129) |
| கடன் வவுச்சர்களின் அதிகரிப்பு / குறைவு | | **66,274,100** | (153,153,980) |
| **தொழிற்பாட்டு செற்பாடுகளின் நிகர காசுப் பாய்வு** | | **414,405,553** | (153,275,974) |
| **முதலீட்டு செய்றபாடுகளிலிருந்து விளைநத காசு** | | | |
| நிலையான சொததுக்களின் சேர்ப்பு (ஆதனங்கள், இயந்திரசாதனங்ள் மற்றும் உபகரணங்கள்) | | **(15,882,721)** | (101,448,496) |
| விற்பனை செய்யப்பட்ட நிரநதர சொத்துக்கள் | | | 5 ,486,000 |
| வட்டி வருமானம் | | **173,307,868** | 184,691,737 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | **(238,562,026)** | (215,165,497) |
| முகவர் விநியோக வைப்புகளின் அதிகரிப்பு | | **715,000** | 1 ,912,500 |
| **முதலீட்டு செயற்பாடுகளினால் விளைந்த தேறிய காசு** | | **(80,421,879)** | (124,523,756) |
| | | **333,983,654** | (277,799,730) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய காசு அதிகரிப்பு/.குறைவு | | **333,983,654** | (277,799,730) |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | **461,682,393** | 739,482,123 |
| ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | **795,666,048** | 461,682,393 |
| வங்கிகளிலுள்ள பணம் இலங்கை வங்கி | | **485,654,516** | 311,991,571 |
| மக்கள் வங்கி | | **268,621,669** | 105,717,241 |
| சம்பத் வங்கி | | **41,373,458** | 43,957,177 |
| கையிலுள்ள காசு | | **16,404** | 16,404 |
| | | **795,666,048** | 461,682,393 |

# அபிவிருத்தி லொத்தர சபை உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

| 2019 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது | சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நிதியம் | பரிசு ஒதுக்கக் கணக்கு | தக்கவைத்த வருவாய்கள் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2018.01.01 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 810,029,458 | 107,862,341 | - | 922,291,799 |
| ஆண்டில் சேர்க்கப்பட்டவை | | 161,016,492 | 2,187,603,956 | | 2,348,620,448 |
| **முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் முன** | | | | | |
| சசனாதிபதி நிதியத்திற்கு சென்மதியானவைகளின் மாற்றம் | | | (2,058,000,000) | | (2,058,000,000) |
| 2018.01.10 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 971,045,950 | 237,466,297 | - | 1,212,912,247 |
| ஆண்டில் சேர்க்கப்பட்டவை | | 132,151,335 | 2,668,792,667 | | 2,800,944,001 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | | 575,515,293 | 575,515,293 |
| சனாதிபதி நிதியத்திற்கான ஒதுக்கீடு | | | (2,428,466,297) | | (2,428,466,297) |
| 2019.12.31 இல் உள்ளவாறு மீதி | 4 ,400,000 | 1,103,197,285 | 477,792,667 | 575,515,293 | 2,160,905,245 |

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. அறிக்கையிடும் நிறுவனம்

அபிவிருத்தி லொத்தர் சபை 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. சபையின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தின் முகவரி இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஆகும். இவ்வருடத்தில் சபையின் முதன்மையான பணி லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதாகும்.

## 2. தயாரிப்பதன் அடிப்படை

### 2.1 இணக்க கூற்று

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள, இதனகத்துப் பின்னர் புள்ளி விபரங்கள் என அழைக்கப்படும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அரச நிதி ஒழுங்குவிதிகளிலும் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளும் குறித்துரைக்கப்படுகின்ற நியமங்களுக்கு அமைவாக இந்நிதி கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2. அளவீட்டின் அடிப்படை

பின்வருமாறு காட்டப்பட்டுள்ள முறைகள் தவிர்ந்ததாக இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிலையான வைப்பீடு மீதான முதலீடு**
-நியாய பெருமதியின் அடிப்படையில

**காணிகள் மற்றும் கட்டிடங்கள்**
-மீள் கணிப்பீட்டு பெறுமானத்தின் அடிப்படையில்.

**பணிக்கொடை களுக்கான ஒதுக்கம்**
- பணிக்கொடை களுக்கான சூத்திரம் மற்றும் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நடப்பு பெறுமதியின் அடிப்படையில்

### 2.3 நடைமுறை சார்ந்த மற்றும் சமர்ப்பண செலாவணி

நிதிக்கூற்றுக்கள் சபையின் நடைமுறை சார்ந்த இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது. இலங்கை ரூபாய்கள் வடிவத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து நிதி தகவல்களும் அண்மித்த ரூபாய் பெறுமானத்தில் மட்டமாக்கப்பட்டுள்ளது.

### 2.4 வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட திகதி

2019 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்கு 2020 பெப்ரவரி 27ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளை ஈடுபடுத்துதல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக முகாமைத்துவம் கணக்கிட்டு கொள்கைகளை நடைமுறை படுத்துதல் மற்றும் அறிக்கை இடப்படுகின்ற சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் செலவுகளின் அளவுகளுக்கு தாக்கம் விளைவிக்கின்ற தீர்ப்புகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அனுபவங்கள் மற்றும் நிலவுகின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் கீழ் நியாயமானதென கருதப்படுகின்ற எதிர்பார்ப்புகளும் உள்ளிட்ட ஏனைய காரணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். ஆகவே உண்மையான பெறுபேறுகள் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளையும் விட மாற்றம் அடையலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள ஊகங்கள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்தில் அது தாக்கம் விளைவிக்கின்ற எந்த ஒரு எதிர்கால காலத்திற்குமான கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அடையாளம் காணப்படும்.

### 2.6 ஏதுவான தன்மை மற்றும் போதுமான தன்மை

நிதி கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இல.01 இற்கு இசைந்தொழுகும் அனைத்து சமமான உருப்படிகளும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். தன்மை அல்லது செயற்பாட்டில் சமமற்ற உருப்படிகளும் பொருட்களாயின் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். இனங்காணப்பட்ட அளவுகளை எதிரீடு செய்வதற்கு சட்டபூர்வமாக எதிர்வீடு செய்வதற்கு உண்மையுள்ள போதும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே தடவையில் சொத்துக்களை காசுருவாக்கி பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு நோக்கம் கொண்டுள்ள போது மாத்திரம் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களை எதிரீடு செய்து தேறிய பெறுமானம் நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும். ஏதேனும் கணக்கிட்டு கொள்கையொன்றின் அல்லது பொருள்கோடல் ஊடாக வரையறுக்கப்பட்டு அல்லது அனுமதி அளிக்கப்பட்டு இருக்குமாயின் தவிர அத்துடன் கணக்கிட்டு கொள்கைகளில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவுகள் விரிவான நிதி கூற்றுக்களில் எதிரீடு செய்யப்படாது.

### 2.7 வருமான வரி

சபையானது வருமான வரிக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்ளிட்ட ஏனைய

வரிகளுக்கு கட்டுப்பட்டதாகும். நிதிக்கூற்றுக்களில் இலங்கைமீது அறிக்கையிடல் நியமங்களை ஏதுவாக்கிக்கொள்ளும் விடயத்தை பின்பற்றுதல் தொடர்பாக வரி வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் வரை நடப்பு மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் வரி விதித்தல் நடவடிக்கைக்கு வரி அறவிட கூடிய இலாபம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு போதியளவு ஒரு தீர்ப்பு தேவையாக இருந்தது. இந்நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வரிச் சட்டங்களின் ஏற்புடைய தன்மை தொடர்பான பொருள் கோடல்களுக்கு ஏதுவான நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. வருடத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வருமான வரி மற்றும் 7 வற் வரி மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. சபை மேன்முறையீடு செய்து எதிர்ப்பினை காட்டியுள்ளது. மேற்படி மதிப்பீடுகளில் பாரிய பொறுப்புக்கள் ஏற்படாதென சபை அபிப்பிராயம் கொள்கின்றது.

### 2.8 இடையறாத்தன்மை

எதிர்வரும் காலத்தில் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சபைக்கு சொந்தமாக சொத்துக்கள் உள்ளதென்பதைப் பற்றி சபை திருப்தி அடைதல் வேண்டும். மேலும் நடப்பிலுள்ள தொழில் முயற்சியாக கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பாக கணிசமான அளவு ஐயம் ஏற்படக்கூடிய பொருண்மையில் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக சபை எதையும் அறியவில்லை என்பதுடன் சபையினை கலைப்பதற்கு அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அப்பிப்பிராயம் கொள்ளவில்லை. ஆகவே, சபையின் நிதி கூற்றுக்களை தயாரித்தல் இடையறா தன்மையை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

### 2.9 ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

அனைத்து அறிக்கையிடல் திகதியின் போதும் சபை சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமான தேய்வு முறைகள் ஆகியவை தொடர்பாக மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமானங்கள், விகிதங்கள் மற்றும் முறைகளை மதிப்பீடு செய்யும்போது முகாமைத்துவத்தின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப் படுவதுடன் இதன் காரணமாக அவை நிச்சயமற்ற தன்மைக்கு உள்ளாகின்றது.

## 3. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

### 3.1 இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

3.1.1. ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவை சேவைகளை வழங்குவதற்காக அல்லது நிர்வாக பணிகளுக்காக வைக்கப்பட்டுள்ள தொட்டு உணரக் கூடிய பொருட்களாக இருப்பதுடன் அவை ஒரு காலகட்டத்திற்கு மேற்பட்ட தடவைகள் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

#### அ. இனங்காணுதல

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நலன்கள் சபைக்கு வந்து சேரும் ஆற்றல் உள்ளதாயின் அத்துடன் சொத்தின் கிரயம் நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் இனம் காணப்படும்.

#### ஆ. அளவிடுதல்

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் ஒட்டுமொத்த பெறுமானத் தேய்வினை கழித்த பின்னர் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமானத்திற்கு குறிப்பிடப்படும்.

